பொதுசன நூலகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்

பக்கங்கள் : பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 சித்திரை 18 புதன்கிழமை (30.04.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 156

# மேலாதிக்க சிந்தனையுள்ள நாடுகள் ஓடி ஒளியும் காலம் வெகு விரைவில்!

## சப்புகஸ்கந்தவில் ஈரான் ஜனாதிபதி சூளுரை

கொழும்பு, ஏப்ரல் 30

**"உலக நாடுகளின் முன்னேற்றத்தைத் தடுத்து நாடுகளுக்கிடையேயும், இனங்களுக்கிடையேயும் மோதலையும் விரிசலையும் உருவாக்கியும், மேலாதிக்க சிந்தனையுடனும் சில நாடுகள் செயற்பட்டு வருகின்றன. இவை இருந்த தடம் தெரியாமல் ஓடி ஒளியும் காலம் மிக விரைவில் வரும். அதற்காக நாம் ஒன்றிணைந்து செயற்படுவோம்."**

**- இவ்வாறு கூறினார் இலங்கை வந்துள்ள ஈரானிய ஜனாதிபதி மஹ்மூத் அஹமதி நிஜாத்.**

ஈரான் அரசின் உதவியுடன் சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை நவீனமயப்படுத்தும் திட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. அந்நிகழ்வில்கலந்து கொண்டு உரையாற்றியபோதே ஈரானிய ஜனாதிபதி அஹமதி நிஜாத் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

உலக நாடுகள் சமாதானத்தையும் அபிவிருத்தியையும விரும்புகின்றன. அவற்றை அடைவதற்காகவே பாடுபடுகின்றன.

ஆனால், வல்லாதிக்க நாடுகள் அவற்றுக்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை இன்றும் இல்லை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 30

காங்சேன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று புதன்கிழமை இடம்பெறமாட்டாது என்று யாழ். செயலகத் திட்டப்பணிப்பாளர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார்.

கப்பற்சேவை இடம்பெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்

நேற்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் காலநிலை சீரற்றுள்ளதாக காரணம் தெரிவித்து கப்பல் சேவை நிறுத்தப்பட்டிருக்கின்றது. (அ-1)

## பேச்சுவார்த்தைமூலமான தீர்வுக்கு ஈரான் முழு ஆதரவு தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 30

இலங்கையின் இனப்பிரச்சினையைப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்ப்பதற்கு ஈரான் தனது முழு ஆதரவையும் தெரிவித்துள்ளது. இலங்கையின் இறைமை, ஒற்றுமை, ஆட்புல ஒருமைப்பாடு ஆகியவற்றை ஈரான் ஆதரிக்கிறது.

இவ்வாறு ஈரானிய ஜனாதிபதி மஹ்மூத் அஹமத் நியாத் தெரிவித்ததாக அவரின் இரண்டு நாள் விஜயத்தின் முடிவில் இலங்கை வெளிவிவகார அமைச்சு நேற்றிரவு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கையில் வாழும் சகல மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிரந்தரத் தீர்வு ஒன்றை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழவர் ஜனநாயக முன்னணி வேட்பாளர் வீட்டின் மீது! கைக்குண்டு வீச்சுத் தாக்குதல்!

### மட்டக்களப்பு புன்னைச்சேனையில் சம்பவம்

கொழும்பு, ஏப்ரல் 30

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஈழவர் ஜனநாயக முன்னணி கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளரின் வீட்டின் மீது நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட கைக்குண்டுவீச்சில் அவரது மனைவி, தாயார் மற்றும் சகோதரன் ஆகியோர் படுகாயமடைந்தனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

மட்டக்களப்பு, குமாரபுரம், புன்னைச்சோலைப் பகுதியில் உள்ள அவரது வீட்டின் மீதே இக்குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இச்சம்பவத்தில் மனைவிராசத்தி மரியதாஸ்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கிலிருந்து முஸ்லிம்களின் வெளியேற்றம் தீவிரவாதத்தின் உச்சக் கட்டங்களில் ஒன்று

### ஈரானிய ஜனாதிபதி முன்னிலையில் மஹிந்த காட்டம்

கொழும்பு, ஏப். 30

இலங்கையில் தீவிரவாத நடவடிக்கைகள் முழுமையாக இல்லாதொழிக்கப்படவேண்டும். வடக்கில் வாழ்ந்த முஸ்லிம்கள் அங்கிருந்து 24 மணித்தியாலத்தில் முற்றாக வெளியேற்றப்பட்டமை இந்தத் தீவிரவாத நடவடிக்கையின் உச்சக்கட்ட செயற்பாடுகளில் ஒன்றாகும்.

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை நவீனமயப்படுத்தும் திட்டத்திற்கான ஆரம்ப வைபவத்தில் தலைமையுரையாற்றும்போதே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில்:-

ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையில் நீண்டகாலமாக உறவு பேணப்பட்டுவருகின்றது. மசகு எண்ணெயை நாம் அதிகளவாக ஈரானிடம் இருந்தே பெறுகின்றோம். மனிதாபிமானரீதியில் ஈரான் எமக்கு உதவி நல்க முன்வந்துள்ளது.

எமது நாட்டின் வடக்கில் வாழ்ந்த முஸ்லிம்கள், அங்கிருந்து 24 மணி நேரத்தில் அங்கிருந்து வெறியேற்றப்பட்டனர். இவ்வாறான தீவிரவாதச் செயல்களை ஒழித்துக்கட்ட நாம் தற்போது நடவடிக்கை எடுத்து வருகிறோம். கிழக்கில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

அபிவிருத்திகளை இலங்கை அரசு மேற்கொள்வதற்கு ஈரான் நிச்சயமாகத் தமது உதவிகளை எமக்கு அளிக்குமென நான் முழுமையாக நம்புகின்றேன் - என்றார். (சி)

## தமிழக மீனவர் அறுவர் நெடுந்தீவில் கைது

யாழ்ப்பாணம், ஏப்ரல் 30

நெடுந்தீவுக் கடற்பரப்பில் உணவு தயாரித்துக்கொண்டிருந்த ஆறு தமிழக மீனவர்கள் கடற்படையினரால் கடந்த சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவுக் கடற்கரைப் பகுதியில் படகு ஒன்று நங்கூரமிடப்பட்டிருந்ததை அவதானித்த கடற்படையினர் சோதனை செய்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியா ஆயுதங்களை வழங்குமானால் இனப் படுகொலைக்கு அதுவும் உடந்தை

### கூட்டமைப்பு எம்.பி. கண்டிக்கிறார்

கொழும்பு, ஏப்ரல் 30

"விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்திற்கு ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கு இலங்கைக்குப் புதுடில்லி நிதியுதவி வழங்குகின்றது என வெளிவந்துள்ள செய்தி உண்மையானால், இந்த நடவடிக்கை தமிழர்களை இனப்படுகொலை செய்ய இந்தியா, கொழும்புக்கு உதவுகின்றது என்ற முடிவுக்கே எம்மை இட்டுச் செல்கிறது."

- இவ்வாறு இணையதளச் செய்திச்சேவை ஒன்றுக்கு கருத்துத் தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

தமிழர்களை இராணுவ ரீதியாக நசுக்குவதற்கு இலங்கை அரசுக்கு உதவுவதன் மூலம் வடக்கு - கிழக்குப் பகுதியிலுள்ள தனது பொருளாதார நலன்களைப் பாதுகாக்கலாம் - ஊக்குவிக்கலாம் என இந்தியா கருதுகின்றது.

தமிழர்களின் அவலத்தைப் புறக்கணித்து இந்தியா இந்த முதலீடுகளை மேற்கொள்வதால் இந்தியா தம் மத்தியில் முதலீட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தமிழர்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

**சம்பூரில் தமிழர்கள் இன்னமும் அகதி முகாம்களில்**

2006,2007ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக சம்பூரிலுள்ள 23 கிராமங்களிலிருந்து இடம்பெயர்ந்த 17 ஆயிரம் தமிழர்கள் இன்னமும் அகதிமுகாம்களிலும் சம்பூருக்கு வெளியேயும் வாழ்கின்றனர்.

இவற்றைக் கருத்தில் கொள்ளாமல் அனல் மின் நிலையத்தை சம்பூரில் அமைப்பதற்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். சிறைச்சாலையில் கைதி உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 30

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதி ஒருவர் தம்மை விடுவிக்கக்கோரி உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளார். நேற்றுமுன்தினம் மாலை முதல் உண்ணாவிரதம் மேற்கொண்டுவரும் எஸ்.கோபாலகிருஷ்ணன் என்ற இந்தக் கைதி மயக்கமுற்ற நிலையில் யாழ்.ஆஸ்பத்திரியில் நேற்றிரவு அனுமதிக்கப்பட்டுள்ளார். (1-78)

## விபத்தில் சிக்கி அமைச்சர் மேர்வின் காயம்; அவருடன் பயணம் செய்தவர் உடன் பலி

கொழும்பு, ஏப். 30

தொழில்துறை அமைச்சர் மேர்வின் சில்வா பயணித்த வாகனம் நேற்று மாலை 3.30 மணியளவில் தெஹியத்தகண்டியவில் வைத்து விபத்துக்குள்ளாகியது.

இந்த விபத்துச் சம்பவத்தில் [illegible] தேசசபையின் தவிசாளர் சீவலி கலிங்க திலக்க உயிரிழந்துள்ளார்.

மே தின நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தும் முகமாக அம்பாறைக்குச் சென்றுவிட்டு கொழும்பு திரும்பிக் கொண்டிருந்த வேளை

(12 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு: 10.05.192
மறைவு: 31.03.2008

### திருமதி காசிநாதர் ஆச்சிக்குட்டி

31.03.2008 அன்று சிவபதமெய்திய எமது அன்புத் தெய்வத்தின் இறுதிச்சடங்கில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், பாடசாலைச் சமூகத்தினர் ஆகியோருக்கும் தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் இன்னும் பல வழிகளில் உதவியோருக்கும் எமது உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன் இன்று (30.04.2008) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.
(73677)
குடும்பத்தினர்

## நெஞ்சை நெகிழ வைக்கும் ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்



உள்ளம் மகிழ:
14.08.1931
உள்ளம் நெகிழ:
04.05.2003

### அமரர் தம்பிப்பிள்ளை மயில்வாகனம்

(ஓய்வூதியர், தொழில்நுட்ப அலுவலர், நீர்ப்பாசனத் திணைக்களம்)

அன்புடன் பெற்று ஆசை மழலைகள் கூறி
இன்ப வாழ்வளித்த எங்கள் பிதாவே
ஐந்தாண்டென்ன அகிலமே அழிந்தாலும்
உங்கள் நினைவால் ஆறுமோ எங்கள் நெஞ்சம்

(73669)

திருமதி ம. தேவாமிர்தம்,
ஆஸ்பத்திரி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரமக்கள்.

## காரைநகரில் இன்று புத்தகக் கண்காட்சி

காரைநகர் பிரதேச சபை உலக புத்தக தினத்தை முன்னிட்டு நடத்தும் நூலகக் கண்காட்சி காரைநகர் பிரதேசசபையின் வடக்கு பொதுநூலக மண்டபத்தில் இன்று புதன்கிழமை காலை 10மணிக்கு பிரதேச சபை செயலாளர் இ.லோகநாதன் தலைமையில் நடைபெற உள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி.வ.வசந்தகுமாரும் சிறப்பு விருந்தினர்களாக இலங்கை வங்கி காரைநகர் கிளை முகாமையாளர் அ.பகீரதனும், யாழ்றரன் கல்லூரி அதிபர் ந.பரமசிவமும் கலந்து கொள்ளஉள்ளனர். (01-250)

## உடனடி வேலைவாய்ப்பு

திருகோணமலையில் பிரபலமான அச்சகம் ஒன்றுக்கு ஓவ்செற் இயந்திர இயக்குநர் தேவை. சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ், பலாலி வீதி. கோண்டாவில்.
தொடர்புகளுக்கு: 026 222 2617, 021222 6722

## கைத்தொலைபேசி தவறவிடப்பட்டுள்ளது

எனது கைத்தொலைபேசி (LG -U8330) 28.04.2008 அன்று கோண்டாவில் சந்திக்கண்மையில் தவறவிடப்பட்டுள்ளது.

கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

பிரதேச
வைத்தியசாலை,
கோண்டாவில்.

S.N.பிறேம்குமார்
பொதுச்சுகாதாரபரிசோதகர்,
கோண்டாவில்.

## 'பெஷன்ப்ளஸ்' தேவை

அரச அதிகாரியாக கடமையாற்றும் ஒருவருக்கு 'பெஷன்ப்ளஸ்' மோட்டார் சைக்கிள் தேவை. ஒரு கைப்பாவனையில் இருந்த சகல ஆவணங்களுடைய மோட்டார் சைக்கிள் உரிமையாளர் தொடர்பு கொள்ளவும்.

திருமதி சிவலிங்கம் (ஆசிரியை)
ஆறுகால்மடத்தடி, ஆனைக்கோட்டை.

## திருத்தி வாசிக்கவும்

இம் மாதம் இருபத்தைந்தாம் திகதி (25.04.2008) நான்காம் பக்கத்தில் பிரசுரமான திருமதி இரத்தினம் செல்வமணியின் மரண அறிவித்தலில் -

அன்னார் காலஞ்சென்ற சீனியர் இரத்தினத்தின் அன்பு மனைவியும் என்று அச்சானது தவறாகும் . அன்னார் சீனியர் இரத்தினத்தின் மனைவியும் என்று திருத்தி வாசிக்கவும். தவறுக்கு வருந்துகிறோம்.

## உதைப்பந்தாட்டம்

யாழ்வலைட்டகல்வி வலயப் பாடசாலைகளுக்குஇடையேஇடம் பெற்றுவரும் உதைப் பந்தாட்டசுற்றுப்போட்டியின் 17,19 வயதுப் பிரிவினர்களுக்கு இடையேயான அரையிறுதி மற் றும், 3 ஆம் இடத் துக்கான ஆட்டம், இறுதியாட்டம் என்பன இன்று காலை 8 மணிக்கு இடம் பெறவுள்ளன.

19 வயது பிரிவினர்களுக்கான ஆட்டங்கள் யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரியிலும் 17 வய துப்பிரிவினர்களுக்கான ஆட்டங்கள்யாழ்ப்பாணம் மத்திய கல் லூரியிலும் இடம் பெறவுள்ளன.

## அரங்கேற்றம்

ஏழாலை மேற்கைச் சேர்ந்த செல்வி சுகாஜினி குலசிங்கத்தின் பரதநாட்டிய அரங்கேற் றம் எதிர்வரும் சனிக்கிழமை மு.ப. 9 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் பிரதமவிருந்தினர்களாக பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி திருமதிமனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் கலந்து கொள்வர். (1-135)


# இதோ உங்களுக்காக...



FLASH
1) 2GB Kingston - 1,350/=
2) 4GB Kingston - 2,350/=
3) 8GB Kingston - 4,900/=

RAM
1) 128 SD RAM - 1,300/=
2) 512 Kingston DDR I - 3,500/=
3) 1 GB Kingston DDR II - 2,500/=

MOTHER BOARD
1) MSI DDR II Intel - 5,900/=
2) Foxconn - 6,400/=
3) Asrock - 6,200/=
4) Intel 945 GCNL - 8,650/=
5) Asus - P5GC-Max 1333 - 7,400/=
6) Energy 478 - 6,500/=



TONER (Original)
1) HP Toner 12 A - 5,300/=
2) HP Toner 15 A - 5,450/=
3) HP Toner 13 A - 5,450/=
4) HP Toner 49 A - 5,400/=

UPS
1) East / Mercury / Povertree - 5,800/=
2) Powertree - S1250 P (1.2 KV)- 12,900/=

MONITORS
1) SamSung 15" Black CRT - 11,250/=
2) SamSung 17" Black CRT - 14,500/=
3) View Sonic 17" Silver Black CRT - 16,400/=
4) LG-Platron eZ 17" CRT - 16,400/=
5) Daewoo/ View Sonic/Benq- LCD -19,900/=
5) View Sonic/SamSung 17" wide screen-LCD -23,700/=
6) View Sonic/SamSung 19" wide screen-LCD -28,500/=




LOP TOP
1) ASUS/hp/LG

HARD DISK
1) 40 GB IDE- 3,500/=
2) 80 GB Sata- 5,350/=
3) 160 GB Sate - 6,400/=
4) 250 GB Sate/IDE - 8500/=

DVD WRITER
1) SamSung Sata - 3,900/=
2) Sony - 4,500/=
3) Asus Light Scribe - 4,600/=
4) Combo - 3,400/=

PROCESSOR
1) Intel Celeron - 4,900/=
2) Intel 478 PGA - 6,000/=
3) Intel 3.O GHZ-2m-7,900/=
4) Intel 1.8 Dual Core - 8,250/=
5) Intel 2.0 Dual Core - 9,900/=
6) Intel 2.2 Core 2 Duo -14,900/=



PRINTER
1) LQ -300 + II Epson - 21,500/=
2) HP 1020 LaserJet - 18,900/=
3) SamSung LaserJet - 15,000/=

MUSIC WORLD & COMPUTERS
141B, பலாலி வீதி, தபால்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி.
(ஞாயிறு விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியை திருமதி வரதஜனனி தேவராஜன் அவர்களின் அன்புத் தாய்

### திருமதி அன்னப்பிள்ளை மயில்வாகனம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்
யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்

(73670)

## கண்ணீர் அஞ்சலி

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி செந்தில்நாதன் தேவமலர் அவர்களின் தாயார்

### அமரர் திருமதி தம்பு செல்லம்மா

அவர்கள் 29.04.2008 அன்று காலமானார். அன்னாரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உதவி அரசாங்க அதிபர்
பணிமனை, காரைநகர்.

உதவி அரசாங்க அதிபரும்,
உத்தியோகத்தர்களும்.

(C-552632)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அன்னப்பிள்ளை மயில்வாகனம்



(ஓய்வுபெற்ற ஆசிரியை, மீசாலை வீரசிங்கம் ம.வி.)

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னப்பிள்ளை மயில்வாகனம் 27.04.2008 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற மயில்வாகனத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பரமசாமி மற்றும் சேதுப்பிள்ளை, தம்பிப்பிள்ளை, சுப்பிரமணியம், கணபதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் லோகஜனனி, கிருபாமூர்த்தி (உதவிக் கல்விப் பணிப்பாளர், காணி அபிவிருத்தி அமைச்சு), கிருபாகுகன் (லண்டன்), கிருபாசுதன் (பிரதி திட்டமிடல் பணிப்பாளர், நிக்கொட், கச்சேரி, வவுனியா), வரதஜனனி (ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பாக்கியராஜா (உதவிக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி), சாந்தினி (R.M.O, கொழும்பு), நித்தியகுமாரி (லண்டன்), வான்மதி (உதவித் திட்டமிடல் பணிப்பாளர், வவுனியா), தேவராஜன் (ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமியும், டாருகீசன், தாட்சாயினி, கிருஷான், நிருபா, நிவேதா, நிருஷி, தாரணி, ஆரபி, யதுர்சன், கோபிராம் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மீசாலை கிழக்கு,
மீசாலை.
(73658)
தகவல்:
பிள்ளைகள்

### திருமதி செல்லம்மா தம்பு

காரைநகர், கருங்காலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா தம்பு நேற்று (29.04.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னப்பு - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், தம்புவின் அன்பு மனைவியும், தேவமலர் (சமுர்த்தி உத்தி யோகத்தர், (J40) காரைநகர்), சந்திரமலர் (போரூட், நெல்லியடி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், செந்தில்நாதன் (சாரதி, தனியார் சிற்றூர்தி சேவைச் சங்கம், காரைநகர்), சிறீநிவாசன் (அபான்ஸ் எலக்ரோனிக், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரசாந்தன், கஜரூபன், சயந்தன், கவிகரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (29.04.2008) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகள் நீலகிரி இந்துமயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கருங்காலி, காரைநகர். (சி/552833) கணவர், பிள்ளைகள்.

### நடராஜா மங்கையர்க்கரசி



மிருசுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் மஞ்சத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா மங்கையர்க்கரசி (29.04.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கணபதிப்பிள்ளை கந்தையா, அமரர் சிவகாமிப்பிள்ளை , தெய்வானை மற்றும் அருணாசலம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சேதுப்பிள்ளை, சரஸ்வதி, தீலகவதி ஆகியோரின் மைத்துனியும், சிறீகரன், அகல்யா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2008) புதன் கிழமை அன்னாரது இல்லத்தில் மு.ப, 10.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மஞ்சத்தடி,
இணுவில்.
(73678)
தகவல்:
சிறிகரன் (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழைப் பிரதேச தடகளப் போட்டிகள்; ஆர்.டி.எஸ்., சன்மார்க்கம் இணைச்சம்பியன்

## சிறந்த தடகள வீரனாக சுதர்சன் தெரிவு

வலி.வடக்கு, ஏப்.30



தெல்லிப்பழை வலி.வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் இடம்பெற்ற பெருவிளையாட்டு மற்றும் தடகளப் போட்டிகளில் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டுக் கழகமும் மல்லாகம் சன்மார்க்க விளையாட்டுக் கழகமும் இணைச்சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டன.

இரு அணிகளும் 35 புள்ளிகளைப் பெற்றிருந்தன.

தடகளப் போட்டியில் ஆண்கள் பிரிவில் மல்லாகம் சன்மார்க்க வி.க. முதலாம் இடத்தையும் ஞானவைரவர் வி.க. இரண்டாம் இடத்தையும் பன்னாலை கணேசன் வி.க. 3ஆம் இடத்தையும் பெற்றன.

பெண்கள் பிரிவில் அளவெட்டி விநாயகர் வி.க. முதலாம் இடத்தையும் மல்லாகம் கிராம முன்னேற்ற வி.க. இரண்டாம் இடத்தையும் பன்னாலை கணேசன் வி.க. மூன்றாம் இடத்தையும் பெற்றன.

போட்டி முடிவுகள் வருமாறு:

எல்லே

★ *ஆண்கள்* - மல்லாகம் சன்மார்க்க விளையாட்டுக் கழகம், அளவெட்டி கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டுக் கழகம்.

★ *பெண்கள்* - மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டுக் கழகம், மல்லாகம் சன்மார்க்க விளையாட்டுக் கழகம், அளவெட்டி பாரதிதாசன் விளையாட்டுக் கழகம்.

வலைப்பந்து

தெல்லிப்பழை யூனியன்ஸ் விளையாட்டுக் கழகம், மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம், பன்னாலை கணேசன் விளையாட்டுக் கழகம்.

உதைபந்தாட்டம்

★ *ஆண்கள்* - மாதகல் சென்.லூட்ஸ் விளையாட்டுக் கழகம், மல்லாகம் சன்மார்க்க விளையாட்டுக் கழகம், அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகம்.

★ *பெண்கள்* - அளவெட்டி பாரதிதாசன் விளையாட்டுக் கழகம், மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டுக் கழகம், மல்லாகம் சன்மார்க்க விளையாட்டுக் கழகம்.

துடுப்பாட்டம்

★ *ஆண்கள்* - அளவெட்டி கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டுக் கழகம், பூமா விளையாட்டுக் கழகம், மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டுக் கழகம்.

★ *பெண்கள்* - இளவாலை இளஞ்சுடர் விளையாட்டுக் கழகம், மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டுக் கழகம், அளவெட்டி பாரதிதாசன் விளையாட்டுக் கழகம்.

கபடி

★ *ஆண்கள்* - மாதகல் சென்.லூட்ஸ் விளையாட்டுக் கழகம், அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகம்.

★ *பெண்கள்* - இளவாலை இளஞ் சுடர் விளையாட்டுக் கழகம், மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டுக் கழகம்.

கரப்பந்தாட்டம்

★ *ஆண்கள்* - பன்னாலை கணேசன் விளையாட் டுக் கழகம், காங்கேசன்துறை ஐக் கிய விளையாட் டுக் கழகம், மல்லாகம் சன்மார்க்க விளையாட்டுக் கழகம்.

★ *பெண்கள்* - சென்.லூட்ஸ் விளையாட்டுக் கழகம், மல்லாகம் சன்மார்க்க விளையாட்டுக் கழகம், பன்னாலை கணேசன் விளையாட்டுக் கழகம்.

சிறந்த விளையாட்டு வீரர்கள் விவரம் வருமாறு:

★ *தடகளப் போட்டியில் 2008ஆம் ஆண்டுக்கான சிறந்த தடகள வீரர்* - மல்லாகம் சன்மார்க்க விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எஸ்.சுதர்சன்.

★ *சிறந்த கள வீரர்* - பூமா விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எம்.கோகுலதாஸ்.

★ *சிறந்த கள வீராங்கனை* - மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தைச் சேர்ந்த கீர்த்திகா.

★ *சிறந்த தட வீராங்கனை* - மல்லாகம் கி.அ.சங்க விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எஸ்.மேரி ரஜிதா. (1-86)

## மென்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.30

சங்கானை, நிற்சாமம் ஞானவைரவர் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி நாளை பிற்பகல் 2.30 மணிக்கு மகாதேவப் பிள்ளையார் ஆலய வீதியில் இடம்பெறவுள்ளது.

அளவெட்டி அருணாசலம் வித்தியாலய அதிபர் கு.ஜெகநாதன் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (1)

## பூப்பந்தாட்டம்
## கரம்பன் மகளிர் வெற்றி

வலி.வடக்கு, ஏப்.30

தீவக கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற பெண்களுக்கான பட்மின்ரன் (பூப்பந்தாட்டம்) போட்டியில் கரம்பன் சிறிய புஸ்பம் மகளிர் வித்தியாலயம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி உள்ள மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் கரைநகர் கலாநிதி தியாகராசா மகா வித்தியாலயமும் கரம்பன் சிறிய புஸ்பம் மகளிர் வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

மூன்று செற்றுக்கள் கொண்ட இப் போட்டியில் இரண்டு செற்றுக்கள் கரம்பன் சிறிய புஸ்பம் மகளிர் வித்தியாலயம் வெற்றி கொண்டு சம்பியமானத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (1-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# தென்மராட்சி பெண்கள் உதைபந்தாட்டம் மட்டுவில் கலைவாணி வசமானது கேடயம்

வலி.வடக்கு, ஏப்.30

தென்மராட்சி சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான பெண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் மட்டுவில் கலைவாணி விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகமும் மட்டுவில் கலைவாணி விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளுமே கோல்கள் பெறும் முயற்சியில் கடுமையாக முயன்றபோதிலும் கோல்கள் எதனையும் பெறமுடியவில்லை.

இரு அணிகளும் தமக்குக் கிடைத்த கோல்கள் பெறும் வாய்ப்புகளையும் தவறவிட்ட நிலையில் ஆட்டம் கோல்கள் எதனையும் இரு அணிகளும் பெறாத நிலையில் நிறைவுபெற்றது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காகச் சமநிலை தவிர்ப்பு உதைகள் ஐந்து உதைகள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து மட்டுவில் கலைவாணி விளையாட்டுக் கழகம் 3:2 என்ற கோல்கள் கணக்கில் வளர்மதி விளையாட்டுக் கழகத்தை வெற்றி கொண்டு தென்மராட்சி பிரதேச சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. (1-86)

## கூடைப்பந்தாட்டச் சங்க பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.30

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் எதிர்வரும் மே மாதம் 11ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறும்.

சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் கழகங்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (50)

## கே.ஸி.ஸி.ஸி. கிண்ணக் கிரிக்கெட்
# சென்றலைட்ஸ் 7 விக்கெட்டால் வெற்றி

வலி.வடக்கு, ஏப்.30

கொக்குவில் மத்திய சனசமூகநிலைய விளையாட்டுக் கழகம் கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்திவரும் 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய லீக் முறையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் ஆட்டம் ஒன்றில் யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் ஏழு விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகமும் வடமராட்சி கழுகுகள் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய கழுகுகள் விளையாட்டுக்கழகம் 28 ஓவர்களுக்கு 117 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

முல்லை 32, நிருசாந் 28, அருண் 15 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்கள்.

சர்வானந்தன் 06 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 29 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுகளையும் மதுசன் 06 ஓவர்களுக்கு பந்துவீசி 26 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும் மற்றும் பாலா, அலன் பிரகாஸ் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் 14.2 ஓவர்களில் 03 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கான 118 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றுக்கொண்டது

றொசான் 40, சர்வானந்தன் 25, மதுசன் 19 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்கள்.

கழுகுகள் அணியின் சார்பில் பந்து வீசிய அசோக் 03 ஓவர்கள் பந்து வீசி 30 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், அருண் 3.2 ஓவர்கள் பந்துவீசி 27ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வசந் 04 ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (1-86)

# மானிப்பாய் பரிஷை வென்றது பற்றீஸியன்ஸ்

வலி.வடக்கு, ஏப்.30

கொக்குவில் மத்திய சனசமூக விளையாட்டுக் கழகம் கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக் கிண்ணத்திற்காக நடத்திவரும் லீக் முறையான 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டியில் ஓர் ஆட்டத்தில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகம் 03 விக்கெட்டுகளினாலும் 100 ஓட்டங்களினாலும் வெற்றி பெற்றுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போட்டியில் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகமும் யாழ்ப்பாணம் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழகம் 30 ஓவர்கள் நிறைவில் 07 விக்கெட்டுகளை இழந்து 247 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

வின்சன் சேச்சில் (ஆட்டமிழக்காமல்) 86, ஜனராஜ் 46, ஜெயந்திரன் 28 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்கள்.

ஹரிகரன் 06 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 28 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுகளையும் அசோக்குமார் 05 ஓவர், விநோத், ஜெயசீலன் 06 ஓவர்களை வீசி முறையே 45, 40, 33 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம் 27 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 147 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

பாஸ்கரன் 21, ஜெயராஜ் 36, விநோத் 21 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்கள்.

ஜக்சன் 05 ஓவர்கள் பந்து வீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 25 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுகளையும் நிலோஜன் 05 ஓவர்கள் பந்து வீசி 27ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் முகுந்தன் 06 ஓவர்கள் பந்து வீசி 38 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் ரஞ்சித், சுஜிவன் 05 ஓவர்கள் பந்துவீசி முறையே 18, 28 ஓட்டங்களுக்கு தலா ஒருவிக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (1-86)

# பருத்தியடைப்பில் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஏப்.30

பருத்தியடைப்பு கதிரேசன் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

ஊர்காவற்றுறை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் கிருபைநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பியின் முன்னாள் வேலணை பிரதேச சபைத் தலைவர் நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தி (மோகன்), ஊர்காவற்றுறை பிரதேச பொறுப்பாளர் காந்தன், விசேட பிரதிநிதியாக வதிமகன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சிறப்பு விருந்தினராகப் பருத்தியடைப்பு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் கு.அமிர்தலிங்கம், பருத்தியடைப்பு பிள்ளையார் ஆலய பரிபாலன சபை செ.லிங்கராசா, காவலூர் பருத்தியடைப்பு கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் இராமநாதன், சாயி மன்ற தலைவர் கை.சிவநாதன், பருத்தியடைப்பு சமுர்த்தி உத்தியோகத்தர் சு.பெல்சிகா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினரால் சிறப்பு பரிசில்களும் வழங்கப்பட்டன. இப் பரிசில்களை வேலணை முன்னாள் பிரதேச சபைத் தலைவர் மோகன் வழங்கிக் கௌரவித்தார். (1)

## துடுப்பாட்டம்

மந்திகை,ஏப்.30

பருத்தித்துறை இலங்கை வங்கி தமிழ்ப் புத்தாண்டையொட்டி பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகத்துடன் இணைந்து நடத்தும் 20/20 ஓவர் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் நாளைய ஆட்டங்களின் விவரம் வருமாறு:

★ *காலை 8.30 மணிக்கு* - அல்வாய் நண்பர்கள் வி.க. எதிர் நவசக்தி வி.க.

★ *பிற்பகல் 3 மணிக்கு* - விவேகானந்தா வி.க. எதிர் கலட்டி வி.க. (1-218)



வியாபாரிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் விசேட விலைக்கழிவு

பாடசாலை அப்பியாசப் புத்தகங்கள், எழுது கருவிகள், பேப்பர் வகைகள் உட்படப் பல பொருள்கள்

யாழ். மொத்த விலையில் 20% - 30% வீதக் கழிவு விலையில் (கொழும்பு விலையில்) பெற்றுக்கொள்ளலாம்.

நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

முழுமையாக விற்றுத் தீர்த்தல்! உடன் விரையுங்கள்....!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீட்கப்படாத அடகு நகைகளின் பகிரங்க ஏல விற்பனை

யாழ்.மாவட்டத்தில் உள்ள பின்வரும் இலங்கை வங்கிக் கிளைகளில் 31.12.2006இற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் 30.06.2007 இற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

| கிளையின் பெயர் | ஏல விற்பனைத் திகதி இடம் நேரம் |
|---|---|
| யாழ்.மேற்தரக்கிளை | யாழ்ப்பாணம் மேற்தரக்கிளை யாழ்ப்பாணம். 2008 மே மாதம் 17ஆம் (சனி), 18ஆம் (ஞாயிறு) திகதிகளில் காலை 9.30 மணிக்கு |
| யாழ்.2ஆம் மேற்தரக்கிளை | |
| காரைநகர் | |
| திருநெல்வேலி (கோப்பாய் விரிவாக்கற்கிளை உட்பட) | |
| சுன்னாகம் (அச்சுவேலி விரிவாக்கற்கிளை உட்பட) | |
| மானிப்பாய் (சங்கானை விரிவாக்கற்கிளை உட்பட) | |
| காங்கேசன்துறை | |
| நெல்லியடி | |
| பருத்தித்துறை | |
| சாவகச்சேரி | |

*இந்த ஏல விற்பனையை ஒன்றிணைக்கும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்கு உண்டு.*

**உதவிப் பொது முகாமையாளர்**
இலங்கை வங்கி *(வட பிராந்தியம்)*
**உதவிப் பொது முகாமையாளர் காரியாலயம்**
*ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*
*தொ.பே.இல: 021 222 3126, 021 222 2735* (சி/552629)


## வலி.மேற்கில் இலக்கியப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஏப்.30

வலி.மேற்கு கலாசாரப் பேரவை நடத்தும் இசை (வாய்ப்பாட்டு)/சமூக நாடக/ நாட்டுக்கூத்துப் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்போட்டியில் பிரதேசத்திலுள்ள மன்றங்கள் அல்லது குழுக்கள் அல்லது தனி நபர்கள் விண்ணப்பிக்கலாம்.

வெற்றிபெறும் முதல் 3 பேருக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

முதலாம் இடத்தைப் பெறும் வெற்றியாளரின் படைப்பு பிரதேச கலாசார விழாவில் மேடையேற்றப்படும்.

போட்டிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 9ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்திற்கு விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (202-29)

## நெடுந்தீவுக்கு மின்கம்பங்கள் எடுத்துவரப்பட்டன

நல்லூர்,ஏப்.30

நெடுந்தீவுக்கான மின்விநியோக விஸ்தரிப்பு வேலைகளை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக மின்கம்பங்கள் நெடுந்தீவுக்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

மின் இணைப்புக்கான வயர்கள் மற்றும் உபகரணங்களை எடுத்துவருவதற்கும் வேண்டிய உதவிகளைக் கடற்படையினர் செய்துவருவதாகவும் -

அனைத்துப் பொருள்களும் நெடுந்தீவுக்கு வந்து சேர்ந்ததும் விஸ்தரிப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (202-111)

## நுணசை முருகமூர்த்தி ஆலயத்திற்கு சித்திரத்தேர்

வலி.தென்மேற்கு,ஏப்.30

மாதகல் நுணசை முருகமூர்த்தி ஆலயத்திற்குப் புதிய சித்திரத்தேர் ஒன்று அமைக்கப்படவுள்ளது. தற்போது ஆலயத்திலுள்ள மிகப் பழைமை வாய்ந்த தேருக்குப் பதிலாக இப்புதிய சித்திரத்தேர் உருவாக்கப்படவுள்ளது.

இத்தேர் அமைக்கும் பணி தற்போது ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக ஆலய தர்மகர்த்தா கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம் தெரிவித்தார். (202-135)


### பெண் பணியாளர் தேவை


யாழ்.நகரிலுள்ள தனியார் கல்வி நிறுவனத்தில் கடமையாற்றுவதற்குப் பெண் பணியாளர் தேவை.
01.05.2008 வியாழன் 9 - 2 pm. நேரில் வரவும்.
தொடர்பு:
4, மணிக்கூட்டு ஒழுங்கை,யாழ்ப்பாணம்.
T.P. 021 222 9212 (73661)

### தவறிவிட்டது

இல.51, நொத்தாரிஸ் லேன், அரியாலை மேற்கு என்னும் முகவரியைச் சேர்ந்த கனகலிங்கம் லதிக்கா என்பவரது தேசிய அ.அட்டை (826951214 V) 25.04.2008 அன்று ஸ்ரான்லி கல்லூரி ஒழுங்கையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் அல்லது லயன்ஸ் பான்சி கவுஸ் (ஸ்ரான்லி கல்லூரி முன்பாக), நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (73655)


### மரண அறிவித்தல்

#### சதாசிவம் சிவனடியார் (ஆச்சாரியார்)



திருநெல்வேலி, பத்திரகாளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் சிவனடியார் 27.04.2008 ஞாயிற்றுக் கிழமை அன்று காலமானார்.

அன்னார் சதாசிவம் - செல்லம்மா தம்பதியரின் புதல்வனும் செல்லத்துரை - செல்லாச்சி தம்பதியரின் மருமகனும் மகாலச்சுமியின் அன்புக் கணவரும் செல்வராணி, சாந்தா, சரவணபவானந்தன் (ராசன், லிபியா), சத்தியநாதன் (மோகன், கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் கதிரமலை, பரஞ்சோதி (துரை), கோணேஸ்வரி (கோமளா), நந்தினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து, சின்னையா சிவகுருநாதன் (நல்லையா) மற்றும் செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் பத்மநாதன் (J.P), சிவபாக்கியம், நாகலோகதேவி, திலகவதி மற்றும் காலஞ்சென்ற மயில்வாகனம் (ஆயர்பாடி) ஆகியோரின் மைத்துனரும் தயாழினி, கணேசமூர்த்தி (பிரான்ஸ்), சிவகௌரி (ஆசிரியை, யா/ எழுவைதீவு றோ.க.த.க.பாடசாலை), சதீஸ்வரன், பத்மநிதி , தனுசா (சிவபூமி பாடசாலை ஆசிரியை, கோண்டாவில்), சிஸ்ரரூபன், டிலாஜினி ஆகியோரின் பேரனும் கிருஸ்சானாவின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2008) புதன் கிழமை முற்பகல்10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


*அரசடி லேன்,*
*திருநெல்வேலி கிழக்கு.* (73664) தகவல்: குடும்பத்தினர்.

### கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி யமுனா பாஸ்கரனின் அன்புச் சகோதரி
**திருமதி பத்மலோஜினி மரியதாஸ்**
அவர்களின் மறைவையிட்டு
அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கல்விச் சமூகம்,
தெல்லிப்பழை. (73660) யா/காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரி.

### 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் நவரட்ணம் குணபாலசிங்கம்**
(ஓய்வுபெற்ற ஊழியர், யாழ்.போதனா வைத்தியசாலை )

அன்னை மடியில் 22-10-1939 ஆண்டவன் அடியில் 26-04-1988

எமது அன்புத் தெய்வம் அப்பாவே
அன்பிற்கும் பண்பிற்கும் பாசத்திற்கும்
பிறப்பிடமாய்த் திகழ்ந்த எங்கள் அன்புத் தந்தையே!
எங்களை நல்வழிப் படுத்திய அன்புத் தெய்வமே!
நீங்கள் மறைந்து இருபது ஆண்டுகள் சென்றாலும்
எங்கள் இதயத்தில் நிலைத்து நிற்கின்றதப்பா.

*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

*259/5, ஆ.வ.வீதி,*
*அரியாலை,*
*யாழ்ப்பாணம்.*

அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(73600)

### மரண அறிவித்தல்

#### திருமதி கிருஷ்ணமூர்த்தி சரசு



சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருஷ்ணமூர்த்தி சரசு 28.04.2008 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கிருஷ்ணமூர்த்தியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் செல்லையாவின் அன்புச் சகோதரியும் யதீஸ்குமார் (அலுவலக உத்தியோகத்தர், யா/கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி), சுரேஸ்குமார் (கணக்காளர், கச்சேரி - மன்னார்), புவனேந்திரகுமார், யோகராணி (ஜேர்மனி), ஜெயராணி (சாந்தியகம்) ஆகியோரின் அன்புத் தாயும் சத்திதாசனின் மாமியும் சச்சினின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.05.2008) வியாழக் கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அளவெட்டி தெற்கு கொட்டுப்பனை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சண்டிலிப்பாய் வடக்கு,*
*சண்டிலிப்பாய்.*
*தொ.பே. 060 2219959* (73667)

தகவல்: கணவர், பிள்ளைகள்.


**கொழும்பில் இருந்து வருகைதரும் இறை தியான குழுவினர் வழங்கும்**



## இறைதியான குணமாக்கல் வழிபாடுகள்

**01.05.2008 - வியாழன் - மாலை 3.30 - 6.30 மணி வரை**
**பண்டத்தரிப்பு பற்றிமா அன்னை திருத்தலத்தில்**

**யாழ்.பழைய பூங்கா வீதியிலுள்ள இறைதியான மண்டபத்தில்**
**02.05.2008 வெள்ளிக்கிழமை**
**04.05.2008 ஞாயிற்றுக்கிழமை**
**இரண்டு நாள்களும்**
**காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை**
*(மதிய உணவு கொண்டு வரவும்)*

03.05.2008 - சனிக்கிழமை
குருக்கள், துறவியர், குருமட மாணவர்கட்கு
இடம் : கலைத்தூது மண்டபம், பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
காலம் : காலை 9 மணி முதல் 2 மணி வரை

இறைவார்த்தையைக் கேட்டு, இறைவல்லமையால் நிறைந்து, குணம்பெற்று, விடுதலை வாழ்வு காண அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இறைதியான குழுவினர்.** (73659) *ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.*


# UNIVERSITY OF JAFFNA
## TENDER NOTICE

The Chairman, University Procurement Committee, University of Jaffna will receive sealed tenders from civil works contractors registered with ICTAD for the following works.

| Work Details | Refundable deposit (Rs.) | Non-refundable deposit (Rs.) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|
| Repairs /Improvements / Painting Dept. of Dance, RAFA, University of Jaffna | 30,000.00 | 500.00 | M7 |
| Roof Repairs to Main Female Toilet, Eastern wing, University of Jaffna. | 4,000.00 | 500.00 | M9 |

Tender forms may be obtained from Senior Assistant Registrar / Capital Works & Planning, University of Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the above tender fees at the Shroff's Counter, University of Jaffna untill 14.05.2008.

Perfected tenders should be sealed separately and marked with the job and the name of the work on the top left hand corner of the envelop and sent by registered post to reach the Registrar, University of Jaffna P.Box 57, Thirunelvely, Jaffna or deposited in the tender box kept at Registrar's Office, University of Jaffna.

Tenders will be accepted till 2.00 p.m on 23.05.2008 and open at 2.30 p.m after the time of closing.

Tenderers or their accredited representatives could be present at the time of opening of tenders.

Tender forms may be inspected by the tenderers free of charge at the Capital Works & Planning Branch of this University during office hours if necessary.

P.D Box 57,
Thirunelvely, Jaffna.
29.04.2008

(C/552628)

Registrar
University of Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடையாள அட்டை வேலைகளுக்கான பொருள்கள் கிராம அலுவலருக்குக் கிடைப்பதில்லை

யாழ்ப்பாணம்,ஏப்.30

யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் கிராம அலுவலர்களுக்கு தேசிய அடையாள அட்டைப் பணிகளுக்காக வழங்கப்படும் காகிதாதிகள் மற்றும் பணக் கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படவில்லையென கிராம அலுவலர்கள் தெரிவிக்கின்றார்கள்.

கடந்த காலங்களில் தேசிய அடையாள அட்டைப் பணிகளுக்கென யாழ்.செயலக அடையாள அட்டைப் பிரிவினால் காகிதாதிகள், பேனாக்கள், காபன் தாள்கள் மற்றும் பசைப் போத்தல்கள் என்பன வழங்கப்பட்டு வந்தன.

தற்போது சுமார் மூன்று வருடங்களுக்கு மேலாக இப்பொருள்கள் கிராம அலுவலர்களுக்கு வழங்கப்படவில்லை. இந்தக் கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டமைக்கான சுற்றுநிருபங்கள் எவையும் ஆள் பதிவுத் திணைக்களத்தினால் வெளியிடப்படவில்லை என்றும் கிராமசேவகர்கள் மத்தியில் அதிருப்தி நிலவுகிறது.

உரிய தேசிய அடையாள அட்டைப் பணிக்கான பொருள்களை கிராம அலுவலர்களுக்கு வழங்க இதனுடன் தொடர்புடைய திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (203)

# பின்தங்கிய பாடசாலை அபிவிருத்தித் திட்டத்திற்கு யாழ்.மாவட்டத்திலும் இரு பாடசாலைகள் தெரிவு

நவாலி,ஏப்.30

தேசிய ரீதியில் பின்தங்கிய பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் சிறுவர் பாதுகாப்பு நிதியம் யாழ்.மாவட்டத்திலும் இரு பாடசாலைகளைத் தெரிவு செய்துள்ளது.

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை, அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலை ஆகிய இரு பாடசாலைகளே தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

சிறுவர் பாதுகாப்பு நிதியம் தேசிய ரீதியில் பின்தங்கிய 10 பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்குத் திட்டமிட்டுள்ளது. அத்திட்டத்தின் கீழ் மேற்படி இரு பாடசாலைகளும் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

கடந்த 23ஆம் திகதி கொழும்பிலிருந்து வருகை தந்திருந்த உயர் அதிகாரிகள் குழுவொன்று அப்பாடசாலைகளுக்கு விஜயம் செய்து அங்கு ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடியது.

இக்கலந்துரையாடலில் பாடசாலைக்குத் தேவையான பலதரப்பட்ட தேவைகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டது. (202-100)

# சங்கானை, விழிசுட்டிக் கிராம வீதி சேதம்

சங்கானை,ஏப்.30

சங்கானை, விழிசுட்டிக் கிராமத்தில் உள்ள சகல வீதிகளும் பல வருடங்களாகப் புனரமைப்புச் செய்யப்படாமல் சேதமடைந்துள்ளன. இதனால் கிராம மக்கள் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

குறிப்பாக மழைகாலங்களில் போக்குவரத்துச் செய்யமுடியாதளவிற்கு குண்டும் குழியுமாகவும் நடந்து செல்ல இயலாதளவிற்கு சேறும் சகதியுமாக உள்ளன என இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

100 குடும்பங்களுக்கு மேல் இக்கிராமத்தில் வசித்து வருகின்றனர். வயல் சூழ்ந்த கிராமம் இது. விவசாயிகள் தமது வாகனங்களை இப்பாதைகளினால் கொண்டு செல்ல முடியாமல் இருப்பதாகவும் மாணவர்கள் மற்றும் பொதுமக்களும் பாதைகளைப் பாவனை செய்யமுடியாமல் இருப்பதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (202-29)

# நீர்வேலி, பூலசிட்டி வசதி குறைந்த மக்களுக்கு ஈ.பி.டி.பி. தையல் இயந்திரம் அன்பளிப்பு



யாழ்ப்பாணம்,ஏப்.30

நீர்வேலி, பூலசிட்டிக் கிராமத்தில் வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் மக்களுக்கு தையல் இயந்திரம் வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை வளர்மதி சனசமூக நிலையத்தில் முன்பள்ளித் தலைவர் கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் யாழ்.மாவட்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அமைப்பாளரும் சமூகசேவை அமைச்சின் மக்கள் தொடர்பாளருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), வலி.கிழக்கு முன்னாள் பிரதேச தலைவர் பூ.குணசிங்கம், விஷேட பிரதிநிதி வதிமகன், தோழர் பாரதி, தோழர் ரவீந்திரன், தோழர் யேசுதாசன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புரைக்கமைய தையல் இயந்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக உதயன் தமது பேச்சில் குறிப்பிட்டார்.

தையல் இயந்திரத்தைப் பெற்றுக்கொண்ட முன்பள்ளித் தலைவர் கந்தசாமி பேசுகையில்,

எமது கோரிக்கைகளை ஏற்று தையல் இயந்திரத்தை வழங்கியதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு நன்றி தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து விளையாட்டு கழக உறுப்பினர்கள், அமைப்பாளர் உதயனிடம் மகஜர்கள் கையளித்தனர். விளையாட்டு உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு 25,000 ரூபா நிதி ஒதுக்கீடு செய்து தருவதாக உறுதி அளித்தார்.

# நெடுந்தீவு மத்தி பெருக்கடிக் கிராமம் அபிவிருத்தி செய்யப்படும்

யாழ்ப்பாணம்,ஏப்.30

நெடுந்தீவு மத்தி பெருக்கடி கிராமம் 'நியாப்' திட்டத்தின்கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இத்தகவலை நெடுந்தீவு உதவி அரச அதிபர் என்.திருலிங்கநாதன் தெரிவித்தார்.

கிராமத்திலுள்ள குடும்பங்களின் தொழில்நுட்ப வாழ்வாதாரத்தை வளப்படுத்தும் நோக்கில் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (202-111)




# வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 40 வறிய மாணவர்களுக்கு உதவி

அச்சுவேலி,ஏப்.30

வலி.கிழக்கு பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த வறிய குடும்பங்களைச் சேர்ந்த 40 மாணவர்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணத் தொகுதிகள் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன.

சமுர்த்தி வங்கிச் சங்கத்தினால் புகைத்தல் எதிர்ப்பு கொடித்தின நிதியாக சேர்க்கப்பட்ட நிதியில் இருந்து இந்தக் கல்வி ஊக்குவிப்பு அன்பளிப்பு வழங்கப்படவுள்ளது.

கோப்பாய் பிரதேச செயலாளர் சி.ஏ. மோகன்றாஸ் தலைமையில் அண்மையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் வறிய மாணவர்கள் 40 பேருக்கு பாடசாலை உபகரணத் தொகுதி வழங்குவது என்றும் அதற்கு 80 ஆயிரம் ரூபாவை பயன்படுத்துவது என்ற தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

கிராமசேவையாளர் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஊடாக பொருத்தமான மாணவர்கள் இனங்காணப்பட்டு கல்வி ஊக்குவிப்புக்கான உபகரணத்தொகுதி வழங்கப்படவுள்ளது. (202-11)

# தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையத்திலுள்ள இளைஞர்களுக்குத் தொழில்நுட்ப பயிற்சிகள்

யாழ்ப்பாணம்,ஏப்.30

தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையத்தில் உள்ள இளைஞர்களுக்குத் தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இந்த நிலையத்தில் உயிர் அச்சுறுத்தல் காரணமாகச் சரணடைந்த 298 பேர் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். அவர்களுள் 98 இளைஞர்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு மூன்று மாதம் தொழில்நுட்பப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

தொழில்நுட்பக் கல்லூரி உத்தியோகத்தர்கள் நிலையத்திற்குச் சென்று இப்பயிற்சிகளை வழங்குவர் எனக் கல்லூரியின் அதிபர் நா.யோகராஜன் தெரிவித்தார்.

மோட்டார் இயந்திரப் பொறிமுறை, மேசன், தச்சு போன்றவை உட்பட 5 பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இப்பயிற்சியின் முடிவில் மத்திய கிழக்கு நாடுகளில் குறிப்பிட்ட இளைஞர்கள் வேலைவாய்ப்பைப் பெறக்கூடிய சாத்தியம் உள்ளது எனவும் கல்லூரி அதிபர் மேலும் தெரிவித்தார். (202-302)

# கோப்பாய் பிரதேச பேரவையின் ஏற்பாட்டில் தமிழ் பண்பாட்டுப் பெருவிழா இரு தினங்களுக்கு

அச்சுவேலி,ஏப்.30

கோப்பாய் பிரதேச செயலக பண்பாட்டு பேரவையினால் தமிழ் பண்பாட்டு பெருவிழா இரண்டு தினங்களுக்கு கொண்டாடப்படவுள்ளது.

கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் அண்மையில் நடைபெற்ற பண்பாட்டுப் பேரவையின் பொதுக் கூட்டத்தில் தமிழ் பண்பாட்டு பெருவிழாவை இரண்டு தினங்கள் கொண்டாடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

முதல்நாள் விழா கோப்பாய் பிரதேச செயலக வளாகத்திலும் இரண்டாம் நாள் விழா ஆவரங்கால் சிவசக்தி கல்யாண மண்டபத்திலும் நடைபெறவுள்ளன.

தமிழ் பண்பாட்டு ஊர்தி ஊர்வலம், தமிழ் ஆய்வரங்கு, உரை அரங்கு, கலை நிகழ்வுகள் என்பன காலை - மாலை அமர்வுகளாக நடைபெறவுள்ளன.

பண்பாட்டு பெருவிழாவை முன்னிட்டு வலி.கிழக்கு பிரதேச பண்பாட்டு பாரம்பரியங்கள் மற்றும் தமிழ் மரபுகளை உள்ளடக்கமாக கொண்ட பிரதேச மலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது. (202-11)

# சேதமடைந்துள்ள வீதி, மதகை திருத்தித் தரக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.30

காரைநகர், எமாந்திபுலம் கல்லூரி வீதியும் மதகும் முற்றாகச் சேதமடைந்துள்ளன. எனவே அதனைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக சேதமடைந்திருக்கும் இந்த மதகினைப் புனரமைக்குமாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் இதுவரை எதுவித பலனும் கிடைக்கவில்லை என இப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

விவசாய வீதியாகக் காணப்படும் இந்த வீதி ஊடாகவே அதிகளவான விவசாயிகள் தங்கள் விளைநிலங்களுக்குச் சென்று வருவதுடன் உழவு இயந்திரங்கள், மாட்டு வண்டில்கள் மூலம் வைக்கோல், நெல் போன்றவற்றையும் எரு, இயற்கைப் பசளை என்பவற்றை இவ்வீதி ஊடாகவே கொண்டு செல்கின்றனர்.

இவ்வாறு கொண்டு செல்பவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதுடன் சேதமடைந்த மதகிற்குள் வீழ்ந்து பொது மக்கள் காயமடையும் சம்பவங்களும் அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகின்றது. (202-250)

# கடலுணவு பதனிடும் பயிற்சி

நவாலி,ஏப்.30

'வேள்ட் விசன்' நிறுவனம் கடலுணவு பதனிடும் பயிற்சி வகுப்பொன்றை நவாலி சென்.பீற்றர்ஸ் பாடசாலையில் அண்மையில் நடத்தியது.

கடற்றொழிலுடன் தொடர்புடைய குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு 4 நாள்கள் இப்பயிற்சி நடத்தப்பட்டது.

கடற்றொழிலாளர் சம்மேளனத் தலைவர் ந.சிவபாதம் தலைமையில் இடம்பெற்ற இப்பயிற்சி வகுப்பில் மானிப்பாய் சூசையப்பர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், காக்கைதீவு கடற்றொழிலாளர் சங்கம், அடைக்கலநாயகி கூட்டுறவுச் சங்கம், நவாலி கடற்றொழிலாளர் கூ.சங்கம் ஆகியவற்றைச் சேர்ந்த 31 பெண்கள் கலந்துகொண்டனர்.

பயிற்சியின் முடிவில் ஒவ்வொருவருக்கும் அரைக்கும் இயந்திரமும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (202-100)



மக்கள் வங்கியின் யாழ்.கன்னாதிட்டிக் கிளையில் கடந்த 14ஆம் திகதியன்று இடம்பெற்ற புத்தாண்டு தின வைபவத்தின்போது 'வனிதா வாசனா' சீட்டிழுப்பு நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் உதவிப் பொதுமுகாமையாளர் க.ஆனந்தராஜா உரையாற்றுவதையும் அந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட உடுவில் பிரதேச செயலர் செல்வி மஞ்சுளாதேவி 'வனிதா வாசனா' சீட்டிழுப்பினை நடத்தி அதிர்ஷ்டசாலியைத் தெரிவு செய்வதையும் முதலிரு படங்களிலும் காணலாம். கிளைமுகாமையாளர் ச.சிவபாலன் மற்றும் உதவிப் பொதுமுகாமையாளர் ஆகியோர் பரிசுபெற்ற வாடிக்கையாளரின் பெயர், விவரங்களை உறுதி செய்வதனையும் அருகில் உடுவில் பிரதேச செயலர், உதவி பிரதேச முகாமையாளர் எஸ்.ஹென்றி ஆகியோர் நிற்பதையும் மூன்றாவது படத்தில் காணலாம்.

'வனிதா வாசனா' சீட்டிழுப்பில் கல்லூரியார் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி சோபனா பாலமுரளி பரிசிற்குரிய அதிர்ஷ்டசாலியாகத் தெரிவுசெய்யப்பட்டார். (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்தியக் கிரியைகளும் நன்றி நவிலலும்

மலராக மலர்வு 12.03.1917

சருகாக உதிர்வு 31.03.2008



### அமரர் மா.வீ.ஆறுமுகம்

(நெல், அரிசி வர்த்தகர், சாவகச்சேரி உரிமையாளர்- ஆறுமுகம் மில், சரசாலை)

எங்கள் ஒளி விளக்கே!
நீங்கள் குத்து விளக்காக சுடர்விட ஆரம்பித்து
மாதம் ஒன்றாகிவிட்டதே! பங்குனித் திங்கள்
நன்னாளில் பன்றித் தலைச்சி அம்மன் கற்பூர தீப
ஒளியுடன் சங்கமித்து விட்டீர்களே!
உங்கள் ஆதரவுகளில் நாம் வாழ்ந்தோம் இனி
எங்கள் வாழ்வும் உங்கள் ஒளி சுடரில்தானே!

கடந்த 31.03.2008 அன்று சிவப்பேறு அடைந்த எங்கள் தந்தையின் மரணச்செய்திகேட்டு ஓடோடிவந்து உதவிகள்பலபுரிந்த அனைத்து அயலவர்கள்,உறவினர்கள், ஊரவர்கள், நண்பர்கள், நல்லுள்ளங்கள் அனைவருக்கும் எமது நன்றிகளை தெரிவிப்பதுடன் இன்று (30.04.2008) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும்வண்ணம் சகலரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றிகளுடன்....

மடத்தடி ஒழுங்கை,
கண்டி வீதி, கொடிகாமம். (73532)

குடும்பத்தினர்.

## ஆடையில் தீப்பற்றியதால் குடும்பப் பெண் காயம்

யாழ்ப்பாணம், ஏப்.30

குப்பிவிள்க்கு சரிந்து ஆடையில் தீப் பற்றிக் கொண்டதால் குடும்பப் பெண் எரி காயங்களுக்கு இலக்கானார்.

இச் சம்பவம் கடந்த சனிக்கிழமை கச் சாயில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த வை.சிவமதி (வயது-34) என்பவர் எரிகாயங்களுக்கு இலக்காகி சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

(202-207)

## செயலமர்வு

யாழ்ப்பாணம், ஏப்.30

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை களின் அதிபர்கள், கணிப்பீட்டுக்குப் பொறுப் பான ஆசிரியர்கள் ஆகியோருக்கான பாட சாலைமட்டக் கணிப்பீடு தொடர்பான செய லமர்வு எதிர்வரும் சனிக்கிழமை காலை 8 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடை பெறு மென வலயக் கல்விப் பணிப் பாளர் கு.பிரேமகாந்தன் தெரிவித்தார்.

(202-207)


### இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்,**
19, முருகேசர் லேன், நல்லூர். (73261)

**IBMS**

புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு I : 06.05.2008
பிரிவு II : 10.05.2008 } பகல் 10.00 மணி

குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவை

Head Office: # 209, மானிப்பாய் வீதி, வைத்தீஸ்வராச்சந்தி, யாழ்ப்பாணம்.
T.P 021 222 8232

Branches : • நெ.ம.ம.வி வீதி, நெல்லியடி,
• சங்கத்தானை, சாவகச்சேரி.


## விசேட தேவையுடையவர்களுக்கு உதவி

நாவற்குழி, ஏப்.30

யாழ்.மாவட்டத்தில் உள்ள விசேட தேவைக்குரியவர்களில் இது வரை முறையான வைத்திய சிகிச்சையைப் பெறாதவர்களுக்கு உரிய சிகிச்சை மற்றும் ஆலோசனைகளை வழங்குவதற்கு மாவட்ட சமூக சேவைத் திணைக்களம் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

அவர்களுக்குத் தேவையான மருத்துவ உபகரணங்களையும் திணைக்களம் வழங்கவுள்ளது.எனவே விசேட தேவைக்குரியோர் அல்லது அவர்கள் சார்ந்த உறவினர்களில் ஒருவர் தாம் வதியும் பிரதேச கிராம அலுவலர்கள் அல்லது சமூக சேவை அலுவலர்களிடம் மேற்படி வைத்திய சிகிச்சைக்கான படிவத்தை நிரப்பி யாழ்ப்பாணம், சுண்டிக் குளி சந்தியிலுள்ள ஜெயப்பூர் நிறுவனத்தில் எதிர்வரும் 5ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை தமது பதிவுகளை மேற்கொள்ளலாம் என மாவட்ட சமூக சேவை அலுவலர் ஆ.ஞானவேல் கேட்டுள்ளார்.

(202-288)

## பத்தாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 08 07 1947

உதிர்வு 21 04 1998



### அமரர் கதிரவேலு கந்தையா

(இரத்தினம் மெக்கானிக்)

திதி: 30.04.2008

அன்பின் உறைவிடமாகி எமையெல்லாம்
பாசத்தால் அரவணைத்து வழிகாட்டிய
எம் அன்புத் தெய்வம் அப்பா
கழிகின்ற பொழுதெல்லாம்
விழிகளில் நீர் சுமந்து
உங்கள் நினைவுகளில் மிதக்கின்றோம் அப்பா
ஆண்டுகள் பத்துக் கடந்தாலும்
உங்கள் நினைவால் துன்பம்
தாங்காமல் துடிக்கின்றது எம் இதயம் - அப்பா.

அச்சுவேலி வடக்கு.
அச்சுவேலி. (73560)


பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அன்பே உருவானவரே! ஆளுமையின் இலக்கணமே!
ஊர்வாழ் மக்களின் உயர்வுக்காக எந்நாளும் சிந்தித்த உத்தமரே!
கூட்டுறவென்ன கோவிலென்ன அனைத்துக் கட்டுமானங்களிலும்
உன் அடியை ஆழப்பதித்தவன் நீ தவறென்று கண்டவிடத்து
உன் சிரமும் மீசையும் எவருக்காகவும் மண்டியிட்டதில்லை
சரியெனப்பட்டவற்றைச் சட்டெனப் பேசும் சிவலிங்கமே!
மக்களுக்காக நீ வாழ்ந்த வாழ்வு உன் மரணத்தில் தெரிந்ததையா
சிவலிங்கமாக நீ நீக்கமற நிறைந்திருந்த இடங்களெல்லாம்
செயலற்றுக் கிடக்குதையா
நீ இல்லாத பொதுவைபவங்கள், திருவிழாக்கள்
இவற்றை நினைத்துப் பார்க்க முடியவில்லை...
உன் வெற்றிடத்தை நிரப்புவதற்கு யார் வருவார் இனி
உன் ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.

தோற்றம் 27.07.1940

மறைவு 30.03.2008



அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு தமது துன்பங்களை எம்முடன் பகிர்ந்து கொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் உளமார்ந்த நன்றிகள். அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (30.04.2008) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் உள்ளிட்ட அனைவரையும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு கரம் குவித்து அழைக்கின்றோம்.

இந்த அழைப்பே தங்களின் தனிப்பட்ட அழைப்பாகவும் அமைகிறது என்பதனைத் தயைகூர்ந்து கருத்திற்கொள்க.

### அமரர் முத்து சிவலிங்கம்

தகவல்: N. ஸ்ரீ (மருமகன்)
303, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்,

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழன் சரி, முஸ்லிம் சரி கிழக்கை ஆளவிடுவதா? பேரினவாத்தின் வயிற்றெரிச்சலாக வெளிப்படுகிறது!

**அதிரும் அம்பாறை**

கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில் அதன் ஓர் அங்கமான அம்பாறை மாவட்டம் தேர்தல் அதிர்வுகளைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது.

வாரிச் சுருட்டிக் கொண்டு அரசு சார்ந்த அணியினரும், வாலைச் சுருட்டிக்கொண்டு வீச்சான நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி - முஸ்லிம் காங்கிரஸ் கூட்டும் மாவட்டத்தை அதிரவைத்துக் கொண்டிருக்கின்றன.

பொய்களையும், புரட்டுக்களையும் கட்ட விழ்த்துவிடுவதில் அரசு சார்பு அணியினரும் அதனை முறியடிப்பதில் ஐ.தே.க. - முஸ்லிம் காங்கிரஸ் கூட்டும் பெரும் கரிசனைகளைக் காட்டிவருகின்றன.

முதலமைச்சர் தமிழனா? முஸ்லிமா? என்ற கோஷத்தை வைத்துப் பிரசாரப் பீரங்கிகள் இயக்கவைக்கப்பட்டுள்ள அதேவேளை, பிள்ளையான் அணியினர் இரவு, பகல் ஒலி பெருக்கிப் பிரசார யுக்தியை (மாலை 6 மணியுடன் ஒலிபெருக்கி தடை இருந்தபோதிலும்) கையாண்டுவருகிறது. அரசின் ''நீதி நேர்மையான'' தேர்தல் நடத்துதலுக்கு இது ''சிறந்த'' எடுத்துக்காட்டாகும்.

ஐக்கிய தேசியக் கட்சி தமிழ்மக்களுக்குத் துரோகமிழைத்தது எனத் தமது பிரசுரங்களில் திட்டித் தீர்ப்பதில் பிள்ளையான் அணி மிகக் கரிசனை காட்டிவருவதைக் காண முடிகிறது.

## திக்குத் தெரியாத காட்டில் சிக்கிய நிலையில் தமிழ்மக்கள்

கிழக்கு மாகாண சபையைத் தமிழன் ஆள்வதா? ஒரு சோனி (முஸ்லிம்) ஆளவிடுவதா? என்று சிங்களப் பேரினவாதம் கேட்கிறது. தமிழன் சரி, முஸ்லிம் சரி ஆள விடலாமா என்பது பேரினவாதப் பக்கத்து வயிற்றெரிச்சல் வழிவந்த கேள்வியாக உள்ளது அதனோடு கைகோர்த்து நிற்கும் அணி. ''தமிழ் பேசும் மக்கள்'' என்ற பசப்பு வார்த்தையையும் உச்சரிக்கிறது.

**யானைப் பாகனாக மு.கா.தலைமைத்துவம்**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தாம் வகுத்த தேர்தல் வியூகத்தை முஸ்லிம் மக்களுக்கு விளக்கி வருகின்றது. யானையின் அங்குசமாகக் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ்சும், யானைப்பாகனாக முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவமும் மிளிர்வதாகவே தோன்றுகின்றன.

## யானைப் பாகனாக முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவம்

எமது முதலமைச்சர் (முஸ்லிம் ஒருவர்) சகல சமூகத்தவரினதும் பிரதிநிதியாகத் திகழ்வார்.

நாட்டில் செத்துமடிந்துகொண்டிருக்கும் 'ஜனநாயகம்'' உயிர் பிழைத்து நாடு முழுவதும் ஜனநாயகம் தழைத்தோங்கக் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம் - தமிழ் மக்கள் ஐ.தே.க. - முஸ்லிம் காங்கிரஸ் கூட்டுக்கு வாக்களிக்க வேண்டுமெனக் கோரி நிற்கிறது முஸ்லிம் காங்கிரஸ்.

பாவம் தமிழ் மக்கள். திக்குத் தெரியாத காட்டில் சிக்கித் தவிப்பவர்களாக முழி பிதுங்கி நிற்கின்றனர்.

''சைகைகள்'' எதுவும் வருமா? என ஏங்கி நிற்கக் காணப்படுகின்றனர்.

சிறுபான்மைச் சமூகங்களின் தாயகம் கிழக்கு மாகாணம் என மார் தட்டினால் மட்டும் போதுமா? சாவா? வாழ்வா? என்றிருக்கும் முக்கிய காலகட்டத்திலாவது 'உங்கள்' சமிக்ஞைகள் தூங்கிக்கொண்டுதானிருக்குமா என்பதும் தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதங்கம்.

இத்தோடு முஸ்லிம் காங்கிரஸ் அஷ்ரப் பாணியில் மக்கள் எழுச்சிப் பேராளர் மாநாடுகளை இந்த முக்கிய கால கட்டத்தில் நடத்தத் தொடங்கியுள்ளது.

கடந்த சனிக்கிழமை (26.04.2008) அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த அட்டாளைச் சேனை அஷ்ரம் ஞாபகார்த்த விளையாட்டரங்கில் மக்கள் எழுச்சிப் பேராளர் மாநாட்டை முஸ்லிம் காங்கிரஸ் நடத்தியது.

மக்கள் பெருவெள்ளத்தின் மத்தியில் உணர்வுபூர்வமாக நடைபெற்ற இந்த மாநாட்டில் முஸ்லிம் சமூகத்தைப் பேரினவாத அரசுக்குக் காட்டிக்கொடுத்தவர்களான ஹிஸ்புல்லா, அமீரலி, திடீர்தௌபீக், ரிஷாட் பதியுதீன் உட்பட 'கிழக்கைப் பிரித்த நாயகன்' அதாவுல்லா போன்றோரின் துரோகத்தனங்களை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் புட்டுப் புட்டு வைத்தார். ''நாரே தக்பீர் - அல்லாஹூ அக்பர்'' கோசங்கள் இதன்போது வானளாவ எழுந்தன.

எதிர்வரும் 4 ஆம் திகதி (04.05.2008) காத்தான்குடியில் மாபெரும் மக்கள் எழுச்சி பேராளர் மாநாடு நடைபெறவிருக்கிறது. எதிரிகளின் ''கதிகலங்கும்'' அறிவிப் பையும் ஹக்கீம் வெளியிடத் தவறவில்லை.

**பத்திரிகை படும்பாடு**

அம்பாறை மாவட்டத்தில் என்ன விலை கொடுத்தேனும் வெற்றிலையை வெல்ல வைக்க வேண்டுமென அரச பட்டாளங்கள், ஆக்கிரமித்திருக்கும் இந்நிலையில் அரசு சார் நிறுவனமொன்றின் தமிழ் தினசரியின் பிரதிகள் தினமும் முஸ்லிம் பிரதேசங்களில் எரியூட்டப்பட்ட வண்ணமேயுள்ளன.

''கிழக்கைப் பிரிக்க கால்கோலிய ஜாம்பவான்'' என மார் தட்டும் அரச அமைச்சர் ஒருவர் அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் சோற்றுக்கும், தேநீர் உபசரணைக்கும் சோரம் போனவர்களென நினைத்து முஸ்லிம் கிராமங்களில் கூட்டங்களை நடத்துகிறார்.

சோரம்போன ஓரிரு பிரபலங்களையும், சில கைக்கூலிப் பிரமுகர்களையும் கையுயர்த்த வைத்து ''தக்பீர்'' சொல்லி வெற்றிலைக்கு விசுவாசமாக ''பையத்'' (உடன் படிக்கை) செய்ய வைக்கிறார்.

அடுத்த நாள் அந்த கிராம மக்களை அனைவருமே ''வெற்றிலைக்கு உத்தரவாதம்'' என கையுயர்த்திய படம் போட வைக்கிறார் அரசு சார்ந்த அந்த தமிழ் தினசரியில்!

ஆனால் மக்கள் கொதிக்கிறார்கள், பள்ளி வாசல்கள் முன்பு திரண்டு அந்த தினகர தமிழ் தினசரி பத்திரிகைக்குத் தீ வைத்துக் கொளுத்துகிறார்கள்.

சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கச்சேரிக்கு (அம்பாறை) அழைக்கப்படுகிறார்கள். யானைக்கு ஆதரவான சமுர்த்தி முத்திரை பெறுவோரின் முத்திரைகளை வெட்டுங்கள், யானைக்குச் சார்பாகச் செயற்படும் சமுர்த்தி உத்தியோகத்தர் பற்றித் தகவல் தாருங்கள் என்று கோருகிறார் பொறுப்பு வாய்ந்த அமைச்சர்.

### கிழக்குத் தேர்தல் களம்...

இடம் மாற்றுவாராம் அல்லது தொழிலிலிருந்து நிறுத்துவாராம்! எப்படியிருக்கிறது அம்பாறை மாவட்ட தேர்தல் களம்.

எதிர்வரும் வாரங்களில் அரச அராஜகம், அடாவடித் தனம் அதிகரிக்குமென ஆருடங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

மக்களின் சக்தியான வாக்கு இவற்றுக்கெல்லாம் நல்ல பதிலைத் தராமலா மௌனமாகும்?

என்றாலும் ஆட்சி அதிகாரம் என்ன விலை கொடுத்தேனும் தன் இலக்கை அடைய முனையாமலா இருக்கும்? இப்பபோது வாக்காளருக்கு மிக முக்கியம் ''விழிப்பு''! *


**- அகீல்.**

---

# யாழ்ப்பாணம் பொதுநூலகம் உருவாகுவதற்கு வித்திட்ட பெருமகன் லோங் அடிகளார்

வாழ்ந்தவர் கோடி! மறைந்தவர் கோடி! மக்கள் மனதில் நிலைத்தவர் சிலரே. இந்த வரிசையில் விரல்விட்டு எண்ணக்கூடியவர்களில் யாழ்.மண்ணைத் தம் உயிருக்கு மேலாக நேசித்த பெருமகனார் பிதா ரி.எம். எப்.லோங் அ.ம.தி. அடிகளார் என்றால்அது மிகையாகாது. இவரை யாழ்.மக்களாகிய நாம் காலமெல்லாம் சிரந்தாழ்த்தி,கரங்கூப்பி நன்றிப் பெருக்குடன் நினைவு கூரக் கடமைப்பட்டுள்ளோம். யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியின் தன்னிகரில்லாத புகழ்பூத்த அதிபராகப் பிதா திமொத்தி மேரி பிரான் சிஸ் லோங் M.A. (Cantab) அடிகள் 1936 - 1954 வரை அதிசிறப்புப் பணியாற்றினார். இவரின் மாபெரும் பணியைப் போற்றி இலங்கை அரசு 22.05.1990 இல் முத்திரை வெளியிட்டுக் கௌரவித்தது.

## இன்று லோங் அடிகளாரின் 47 ஆவது நினைவு தினம்



அயர்லாந்திலுள்ள லிமெறிக் என்னுமிடத்தில் கல்வியிலும் விசுவாசத்தில் வைரத் தூண்களாகத் திகழ்ந்தனர் உத்தம லோங் தம்பதிகள். இவர்கள் மூன்று நற்புத்திரர்களையும் ஒரு நற்புத்திரியையும் ஈன்றெடுத்து கல்விமான்களாக உருவாக்கி இயேசுவின் தொண்டிற்கே அர்ப்பணித்த தியாகிகள். இவரது அண்ணன் அருட்கலாநிதி பிறெட்ரிக், இவரது தம்பி அருட்கலாநிதி டானியல், இவரது தங்கை அருட்சகோதரி எமா. அனைவரும் இயேசுவின் திராட்சைத் தோட்டத்தில் உத்தம பணியாளர்கள் என்பனவும் நினைவு கூரப்பாலன.

**யாழ்.நூலகம்**

யாழ்.நூலகம் தென்கிழக்காசியாவின் மணிமுடியெனத் திகழ பிதா லோங் அடிகள் மேற்குலக நாடுகளுக்குச் சென்று தமது தொப்பியை நீட்டியாசகம் செய்து நற்கைங்கரியத்திற்காக அன்று ஒரு கோடி ரூபா நிதியத்தைத் திரட்டி ஒப்படைத்தார். 20.12.1975 அன்று டாக்டர் ஜே.வி.சி. யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரிப் பழைய மாணவ தாய் சங்கத்தினர் அமரர் பிலிப்ஸ் தலைமையில் யாழ்.நூலகத்தின் நுழைவாயிலில் பேரறிஞர் லோங் அடிகளின் சிலையை நிறுவி அன்றைய யாழ்.அரசாங்க அதிபராக இருந்த திருமிகு அன்ரன் அல்பிரட் அவர்களினால் திறக்கப்பட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

போர்க் காலத்தில் றோயல் விமானப் படை ஓடுதளமாக உபயோகிக்கப்பட்ட பலாலி விமானத் தளத்தைச் சிவில் விமானத்துறையாக மாற்றிய பெருமைக்கும் மகிமைக்கும் உரியவர் பிதா லோங் அடிகள் என்றால் அது வெள்ளிடை மலையாகும்.

யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி ஆங்கில மொழிச் சூழலில் பிதா லோங் அடிகளின் பொற்காலம் உன்னத நிலையிலிருந்தாலும் தமிழ்மொழியின் கலை, கலாசார வளர்ச்சிக்கும் பெருந்தொண்டு புரிந்தார்.

அதிபர் லோங் அடி கள் 1938 இல் முதன் முதலாக ''அகில இலங் கைக் கைத்தொழிற் களியாட்டு விழாவும் சம்மேளனமும் யாழ்ப்பாணத்தின் விடை'' எனும் பெயரில் விமான நிதிக்கலை நிகழ்வும் நடத்தி உள்ளூர் கலைஞர்களின் படைப் பாற்றலை வெளி உலகிற்கு அறியச் செய்தார். இற்றைக்கு எழுபது வருடங்களுக்கு முன் இவர் இலை மறை காய்போலிருந்த கலைஞர்களுக்கு உயிரூட்டம் அளித்தார். இன்று கலைஞர்களைக் கௌரவிப்பு விழாக்களுக்கு இவர் முன்னோடியாக திகழ்ந்தார். எனது அருமைத்தந்தையும் யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவரும் புகழ்பூத்த கலைஞருமான அமரர் பிரான்சீஸ் துரையப்பா சலமோனின் கலைப் படைப்பிற்கு ''போட்டோ கிராபிக் புளக்'' வெள்ளிப் பதக்கம் வழங்கி, சான்றிதழும் பிதா லோங் அடிகள் வழங்கியுள்ளார். ஏனைய பிரமுகர்களாலும் கையொப்பம் இடப்பட்டிருப்பதைக் கண்டு பரவசமடைந்தேன். இன்றும் அது என்வசம் உள்ளது.

**துரை.ஆரோக்கியதாசன் (B.A., P.G.D.E.)**
*(முன்னாள் பிரதி அதிபர், பலாலி ஆசிரிய கலாசாலை)*

---

# சிவனை எண்ணியவாறு உலகத்தவருக்கு ஆற்றும் பணியே உண்மையான சிவப்பணி

சைவ நாயன்மார்களுள் அனுபவ ஞானத்தால் முதிர்ச்சி பெற்றவர் திருநாவுக்கரசர் ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' எனக் கூறியதோடுமல்லாமல் வாழ்ந்தும் காட்டியவர்.

பக்தி இயக்கம் பரவியிருந்த பல்லவர் காலத்தில் மக்கள் தொண்டும் அதனூடான ஆற்றுப் படுத்தல்களும் வேண்டப்பட்டிருந்தன. சமயப் பெரியோர்கள் இக்காரியங்களைச் செவ்வனே நிறைவேற்றினர். இதனால் வேதநெறி தழைத்தோங்கியது. மிகு சைவத்துறை செழிப்புற்றது.



சமய வாழ்வியல் மக்கள் தொண்டினையே முதன்மைப்படுத்துகிறது. அப்பர் சுவாமிகளின் வாழ்க்கை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். முதியவராக வாழ்ந்தாலும் பணி செய்தலை முதன்மைப்படுத்திய பெருந்தகை இவர்.

''என்கடன் பணி செய்து கிடப்பதே'' என்ற தாரக மந்திரம், இன்றும் எம்மால் உணர்வெழுச்சியுடன் செயற்படுத்தப்பட வேண்டியதாகும். தமிழகத்தின் மிகப்பெரும் அறிஞரான வி.க.அவர்களின் வாக்கு இங்கு

## சமயம் சார்ந்த வாழ்வியலின் வெற்றிக்கு நம் மண்ணில் அதுவே அடிப்படையாகும்

மனங்கொள்ளத்தக்கதாகும்.

''என்கடன் பணி செய்து கிடப்பதே என்னுஞ் செம்மொழி காலதேச வர்த்தமானப் போக்குக்கேற்றவாறு பொருளை நல்கிக் கொண்டே நிற்கும். எவரெவர் எவ்வெப்பணியில் காதல் கொண்டிருக்கிறாரோ அவரவர் அவ்வப்பணி நின்று என் கடன் பணி செய்து கிடப்பதே என்பதற்குப் பொருள் விரிக்கலாம். எல்லாவிதப் பணி செய்வோர்க்கும் பொதுவாக நிற்பது இப் பெருமொழி'' என்கிறார் வி.க.

சமயப் பணியின் வெற்றி இளையோரும் முதியோரும் இணைந்து ஒருமித்துச் செயற்படுதலிலேயே தங்கியுள்ளது. அப்பர் சுவாமிகள் இளையவராகிய சம்பந்தக் குழந்தையுடன் இணைந்து பணியாற்றியமையை இங்கு குறிப்பிடலாம். படிக்காசு இங்கு குறிப்பிடலாம். படிக்காசு பெற்றுப் பஞ்சம் தீர்த்தல், வேதங்களால் மூடப்பட்ட கதவைத் திறத்தல் என இவர்கள் இணைந்து ஆற்றிய பணிகள் விரிந்து செல்லும்.

**இன்று சித்திரைச் சதயம். நாவுக்கரசரின் குருபூசை தினமாகும்**

சம்பந்தப் பிள்ளையின் பல்லக்கைச் சுமந்த அப்பர் சுவாமிகளின் திறம் அவரது பண்பின் உச்சத்தை வெளிப்படுத்துகிறதல்லவா?

சிவப்பணி என்பதற்கு சிவனுக்கு ஆற்றும் பணி எனக் கொள்ளாது சிவனை எண்ணியவாறு உலகோர்க்கு ஆற்றும் பணியாகக் கொள்வதே பொருத்தமானது. ''எவ்வுயிர்க்கும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும் நின் தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே'' என்றும்

''அன்பர்பணி செய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்பநிலை தானேவந்தெய்தும் பராபரமே'' என்றும் தாயுமான சுவாமிகள் பாடுகிறார்.

''சொற்குருதிக் கப்பரெனச் சொல்'' என்ற முதுமொழிஅப்பர் சுவாமிகளின் பெருமைக்கு அணி சேர்ப்பதாகவுள்ளது. அன்பர் பணியின் மகிமையை அன்றே அவர் அறிந்திருந்தார். ஆற்றுகை செய்தார்.

பணிகள் மலிய வேண்டும். சமயஞ் சார்ந்த வாழ்வியலின் வெற்றிக்கு இதுவே அடிப்படையாக அமையும். நம் மண்ணில் வாழ்வுக்கு, இது அவசியமாக வேண்டப்படுவதாகும்.

**- ச.லலீசன்**

**அதிபர் கோப்பாய் தெற்கு, றோ.க.த.க பாடசாலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடமாடும் நூலகக் கண்காட்சி

சுழிபுரம் .30

வலி.தென்மேற்கு பிரதேச சபையில் பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகத்தினால் நடமாடும் நூலகக் கண்காட்சி கடந்த வியாழக்கிழமை மாதகல் சென்.ஜோசெப் மகாவித்தியாலயத் தில் நடத்தப்பட்டது. இக் கண்காட்சியில் மாதகல் நுண்சை வித்தியாலய மாணவர்களும் மாதகல் சென்.தோமஸ்வித் தியாலயமாணவர்களும் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

(202-28)




## கந்தையா சிவசோதி
## சிவசோதி பத்மாவதி

(73282)

அரிது அரிது இனிய இல்லறம்
வாய்ப்பதென்பது அரிது அதனிலும் அரிது
அது அகவை ஐம்பதை எய்துவது
பொன்விழாக் காணும் எமதருமைக்
தெய்வங்கள் மேலும் சகல சௌபாக்கியங்கள்
பெற்று நீடூழி வாழ வதிரி
உல்லியனொல்லை கண்ணகை அம்பாளை
வேண்டி வாழ்த்துகிறோம்.

மந்திரி மடம், வதிரி, கரவெட்டி.
T.P. 021 226 3235

வாழ்த்துவோர்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## ஏழாம் வருட நினைவலைகள்

உலகோடு 07 ★ 03 ★ 1920



இறையோடு 18 ★ 04 ★ 2001

### அமரர் நாகலிங்கம் பொன்னம்பலம்

திதி: தசமி

மீண்டும் மீண்டும் தோன்றும் மதி போல,
மாண்டபோதிலும் எம் நினைவுகளில்
யாண்டும் மலர்ந்திடும் எம் தந்தையே!
வேண்டுதல் செய்கின்றோம் உம் பாதமதில்
நின்று நிலைத்திருவீர் எம் இதயமதில்!

(73592)

கேணிக்கரை,
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


## COMPUTER EXPRESS
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
#15, Sirambiyadi Lane, Jaffna  Branch : #167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 021 222 8250 , 0777 222422

மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2008 80% off

அனைவருக்கும் புலமைப்பரிசில்

| | | |
|---|---|---|
| Diploma in Computer Science<br>4 Months<br>~~10,750~~ 2,150 | Honours Diploma in Computer Science<br>5 Months<br>~~13,000~~ 2,600 | Diploma in Web page Designing<br>4 Months<br>~~10,750~~ 2,150 |
| Diploma in Graphic Desining<br>4 Months<br>~~10,750~~ 2,150 | Diploma in Desktop Publishing<br>4 Months<br>~~10,000~~ 2,000 | Diploma in Hardware Engineering<br>3 Months<br>~~10,000~~ 2,000 |
| Diploma in Auto CAD<br>3 Months<br>~~10,000~~ 2,000 | Diploma in Microsoft Office<br>3 Months<br>1,500 | Accounting Package<br>3 Months<br>~~10,750~~ 2,150 |

50% Off ADVANCE COURSES

| | | |
|---|---|---|
| Diploma in Multimedia | ~~5500~~ | 2750 |
| Diploma in Video Editing | ~~6500~~ | 3250 |

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம்பெற்ற சான்றிதழ். வரையறுக்கப்படாத கணனிப்பயிற்சி.

வகுப்புக்கள் ஆரம்பம் :
Batch I : 02/05/2008 10AM
Batch II : 03/05/2008 11AM
Batch III : 04/05/2008 11AM
Batch IV : 07/05/2008



# VACANCIES IDM
The Nation's ICT Academy
Pre University College
Affiliated University College

**Instructors**
1) IT related Diploma, Knowledge in Ms.Office, VB.Net, Java, DBMS
2) Minimum 01 year IT related work experience is highly desirable.

**Lecturer**
1) A University degree in Computer Science / IT Graduates in India or Sri Lanka.
2) Minimum 02 years IT related Teaching experience is highly desirable

**Applications should be a addressed to the Asst. Director IDM Affiliated University College On of before 05/05/2008**

IDM Affiliated University College
216, Navalar Road, Jaffna.
021 2229901


## பரீட்சை நிலையம் மாற்றம்

யாழ்ப்பாணம்,ஏப்.30

எதிர்வரும் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் மானிப்பாய் சென். ஆன்ஸ் றோ.க.த.பாடசாலையில் நடைபெறவி ருந்த முஸ்லிம் மற்றும் கத்தோலிக்க பாட சாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்கான நிலையம் தவிர்க்க முடியாத காரணத்தால் மாற்றப்பட்டுள்ளது.

இத்தகவலை யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயம் தெரி வித்தார்.

இப் பரீட்சை குறிப்பிட்ட தினங்களில் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடை பெறும் என அவர் மேலும் தெரிவித்தார்.(202)

## நெடுந்தீவில் உள்ள 1, 260 குடும்பங்களுக்கு உதவி

நல்லூர்,ஏப்.30

நெடுந்தீவைச் சேர்ந்த 1,260 குடும்பங்க ளுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை பற்பசை, சவர்க்காரம், சம்போ போன்ற பொருள் களை யு.என்.எச்.சி.ஆர். வழங்கியுள்ளது.

இந்தப் பொருள்கள் வழங்கும் நிகழ் வில் யு.என்.எச்.சி.ஆர். மாவட்ட இணைப் பாளர், நெடுந்தீவு உதவி அரசாங்க அதி பர், கிராம அலுவலர்கள் கலந்து கொண்டு பொருள்களை வழங்கினார்கள்.

(202-111)

## எள் அறுவடை

சுழிபுரம்,ஏப்.30

சுழிபுரம், பறாளை, காட்டுவயல் பகுதி யில் எள் அறுவடை தற்போது தீவிரமாக நடைபெற்று வருகின்றது.

குடாநாட்டில் எள்ளுக்கு நல்ல கிராக்கி நிலவுகின்றது. இந்நிலையில் மேற்படி பிர தேசத்தில் விளைந்துள்ள எள்ளை அறு வடை செய்வதில் செய்கையாளர்கள் பெரும் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர்.

(202-28)

## உள்ளூராட்சி மன்றங்களுக்கு பயனுள்ள நூல்களை வழங்குவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஏப்.30

இலங்கை உள்ளூராட்சி ஆளுகை நிறு வனம் யாழ்.மாவட்டத்தில் உள்ள உள்ளூ ராட்சி மன்றங்களுக்கு நான்கு வகையான பயனுள்ள நூல்களை வழங்க முன்வந்துள்ளது.

உள்ளூர் ஆளுகை நிறுவன பணிப்பா ளர் இதற்கான விவரங்களை சகல உள்ளூ ராட்சி மன்ற செயலாளர்களிடமும் கோரி யுள்ளார்.

உள்ளூராட்சி சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பற்றிய நூல், நல்லாட்சிக் கான ஒப்பந்த முகாமைத்துவம், உள் ளூராட்சி மன்ற அலுவலக நடைமுறை, பிரதேசசபை சேவைகள் போன்ற நூல்களே இவ்வாறு வழங்கப்படவுள்ளன.

நூல்கள் தேவையான சபைகள் பணிப் பாளர், இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனம், இல. 17, மலலசேகர மாவத்தை, கொழும்பு- 07 எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

நூல்கள் முழுமையாக பெறுவோர் அதற்கான காசோலையை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(203-95)

உ
குகமயம்

## ஸ்ரீ பால கதிர்காம தேவஸ்தானம் நல்லூர்

பாலசம்ரட்ஷணா வழங்கும் முருக பக்திப் பாடல்கள் ஒலி, ஒளி இறுவெட்டு வெளியீட்டு விழா

இடம் : திவ்யஜீவன சங்க மண்டபம்
காலம் : 04.05.2008 ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணி
பாடலை இயற்றியவர் : வித்துவான் ந.வீரமணிஐயர்
இசையமைப்பு : ஜி.அற்புதன்.

(சி/552803)

- தேவஸ்தானம்.

## கண்ணீர் அஞ்சலி

### ஆறுமுகம் முத்தையா



நேற்று (29.04.2008) செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னாரது மறைவையிட்டு எங்கள் குடும்பத்தின் ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்துவதோடு, எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

இ. அரசபிள்ளை,G.P.S.வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம். (73599)

தகவல்:
அரசபிள்ளை சிவபாக்கியம்
(மருமகன்).

## ஓராண்டு நினைவஞ்சலி

அமரர்
### வைத்தி சின்னத்துரை



மலர்வு: 13.08.1950
உதிர்வு: 11.05.2007

திதி: தசமி (30.04.2008)

ஒளி தந்த சுடர் விளக்கை
விதி கொண்டு சென்றதோ?
ஓராண்டு சென்றாலும்
நூறாண்டு போனாலும்
ஆறாது எம் துயர் ஆறாது!!!

(73578)


இன்று (30.04.2008) புதன்கிழமை அன்னாரின் ஓராண்டு நினைவு நிகழ்வுகள் அவரின் புத்தூர் இல்லத்தில் நடைபெற உள்ளன. அந் நிகழ்வுகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நி.முகவரி: தெல்லிப்பழை. த.முகவரி: புத்தூர்மேற்கு, புத்தூர்.

மனைவி,
பிள்ளைகள்.

## அந்தியேட்டி அழைப்பு

பிறப்பு 20 ★ 07 ★ 1933



இறப்பு 02 ★ 04 ★ 2008

கடந்த (02.04.2008) புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம்

### அமரர் பொன்னம்பலம் துரைஜயா

அவர்களின் வீட்டுக்கிருத்தியம் (02.05.2008) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பத்தாருடன் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நவக்கிரி, புத்தூர். (73570) குடும்பத்தினர்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 29 . 01 . 1927



மறைவு 31 . 03 . 2008

கடந்த (31.03.2008) திங்கட்கிழமை அன்று சிவபதமெய்திய

### அமரர் சின்னத்தம்பி இராசையா

(முன்னாள் உரிமையாளர்- மதராஸ் ஜுவெல்லரி மாட் )

அவர்களின் வீட்டுக்கிரியைகள் இன்று (30.04.2008) புதன்கிழமை மு.ப. 10.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்வதுடன், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

கலைமணி வீதி,
கட்டைப்பிராய். (73567)

ஒ.சந்திரேஸ்வரர்
(மைத்துனர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# சர்வதேச ரீதியில் இலங்கை ஓரங்கட்டப்படும் ஆபத்து

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசு தெளிவான வெளிநாட்டுக் கொள்கையைக் கடைப்பிடிக்காமல் விடயங்களைக் குழப்பியடித்துக் கொண்டுள்ளதால் சர்வதேச ரீதியில் இலங்கை தனிமைப்படுத்தப்படும் அபாயம் தோன்றியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ரவி கருணாநாயக்க இவ்வாறு எச்சரித்திருக்கின்றார்.

இலங்கை அரசு எந்தவிதமான ஜனநாயக விதிமுறைகளையும் மதிப்பதில்லை. அது பயங்கரவாதிகளைப் போன்று செயற்படுகின்றது. ஜனநாயக விதிமுறைகளை அரசு மதிப்பதில்லை என்பதை சர்வதேச சமூகம் நன்கு புரிந்து கொண்டுள்ளது.

இதேசமயம், தெளிவான வெளிநாட்டுக் கொள்கையின்றி, சர்வதேச உறவு விடயங்களையும் அரசு குழப்பியடித்து வருகின்றது.

இதனால் இலங்கை தனிமைப்படுத்தப்பட்டு பேரிடர்களைச் சந்திக்கும் அபாயத்துக்குள் - ஆபத்துக்குள் - தள்ளப்பட்டிருக்கின்றது என்கிறார் ரவி கருணாநாயக்க.

சேற்றுக் குழிக்குள் வீழ்ந்தவன் அதிலிருந்து மீளும் முயற்சியாக சேற்றை மென்மேலும் காலால் அழுத்தி, மேலே எழும்பி வர எத்தனிப்பான். ஆனால் சேற்றை மேலும் மேலும் மிதிக்க, மிதிக்க அவன் சேற்றுக்குள் புதைந்து போவான். ஆக, சேற்றுக்குள் இருந்து மீள அவன் எடுக்கும் முயற்சியே அவனை அதற்குள் மேலும் ஆழமாகப் புதைத்துவிடும்.

அதுபோன்ற நிலையிலேயே இன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசு உள்ளது போலும்.

தன்னுடைய உள்நாட்டு விவகாரங்களைக் கையாளும் முறைமையினாலும் சர்வதேச உறவுகளைத் தீர்மானிக்கும் போக்கினாலும் சர்வதேச சமூகத்தில் தனிமைப்படுத்தப்படும் இக்கட்டு நிலைக்குள் இலங்கை அரசு சிக்கியுள்ளது. இந்த இக்கட்டிலிருந்து மீளும் எண்ணத்துடன் - எதிர்பார்ப்புடன் - அது மேற்கொள்ளும் சர்வதேச அணுகுமுறைகளும் தந்திரோபாயங்களும் கூட அதனை மேலும் தீவிர சிக்கல்களுக்குள்ளேயே மாட்டி வருகின்றன.

இலங்கை அபிவிருத்தியடைந்து வரும் மூன்றாம் மண்டல நாடு. அது வெளிநாட்டு உதவிகளிலேயே அதிகம் தங்கியுள்ளது.

ஆனால் இறைமையுள்ள நாட்டுக்குரிய ஜனநாயக மாண்புகளைக் கடைப்பிடிக்கத் தவறி, அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டிருக்கும் அரசுக் கட்டமைப்பு, அதனால் சர்வதேச சமூகத்தின் பிரதான தரப்புகளினது கடும் கண்டனங்களுக்கும் அதிருப்திக்கும் உள்ளாகியிருக்கின்றது.

இப்படி சர்வதேச சமூகத்தின் கடும் விசனத்துக்குள்ளாகியுள்ள அரசு, அந்த அதிருப்தி நிலையையும், அதன் அடிப்படையில் சர்வதேச சமூகத்தின் பிரதான பாத்திரங்கள் எடுக்கும் பதிலடி நடவடிக்கைகளையும் புறந்தள்ளி உதாசீனப்படுத்துவதற்காக சர்வதேச மட்டத்தில் சேராத இடம் சேர்ந்து சிறுமைப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இதனையே கோடி காட்டுகின்றார் ரவி கருணாநாயக்க எம்.பி.

ஈழத் தமிழர்களின் இனப்பிரச்சினை விவகாரத்தில் அவர்களது நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்யும் அமைதித் தீர்வு ஒன்றை வழங்க மறுக்கும் மஹிந்தரின் அரசு, தமிழர் தரப்பு மீது கொடூரப் போர் ஒன்றை ஏவிவிட்டிருக்கின்றது. அதன் தொடராக மோசமான மனித உரிமை மீறல்களையும், கொடிய அடக்கு முறையையும், அரச பயங்கரவாதத்தையும் எதிர்கொள்ளும் அவலம் ஈழத் தமிழினத்துக்கு ஏற்பட்டிருக்கின்றது.

இதன் காரணமாக அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா போன்ற தரப்புகளின் எரிச்சலுக்கும் கடுமையான பதில் நடவடிக்கைகளுக்கும் ஆளாகியுள்ளது இலங்கை.

இலங்கைக்கான உதவிகள், சலுகைகளை வழங்குவதில் இந்நாடுகள் மட்டுப்பாடுகள், கட்டுப்பாடுகளைக் கடுமையாக விதிக்கத் தொடங்கியுள்ளன.

இந்நிலைமையால் எழுந்துள்ள நெருக்கடிகளைச் சந்திப்பதற்காக சீனா,பாகிஸ்தான், ஈரான் போன்ற நாடுகளுடன் அணி சேர்கின்றது இலங்கை.

இந்த இராஜதந்திர காய் நகர்த்தலின் விளைவே மோசமான - ஆபத்தான - விபரீதங்களுக்கு வழி செய்யும் என எச்சரிக்கின்றார் ரவி கருணாநாயக்க.

மூன்றாம் மண்டல நாடான இலங்கை தன்னுடைய அபிவிருத்திக்கு நிரந்தரமாக உதவிகளை வழங்கும், சர்வதேச ரீதியில் தனிமைப்படுத்தப்படாமல் இருப்பதற்கான நிலைமையைத் தரும் தரப்புகளுடனேயே உறவுகளை விருத்தி செய்ய வேண்டும் என்கிறார் அவர்.

சர்வதேச ரீதியில் சர்ச்சைக்கு உள்ளாகி, அமெரிக்க சார்பு மேற்குலகினால் தனிமைப்படுத்தப்பட்டு புறந்தள்ளப்படும் நிலையில் இன்று இருக்கின்றது ஈரான். பேரழிவு தரும் அணு ஆயுத உற்பத்தியில் ஒருதலைப்பட்சமாக ஈரான் ஈடுபடுவதாகக் குற்றம் சுமத்தி, அதன் மீது கடுப்பாக இருக்கின்றது மேற்குலகு. அத்தகைய நாட்டிடமாவது இருந்து உதவிகளைப் பெறலாமே என்ற நப்பாசையில் அதனோடு அதிகம் தோழமை பூண்டு, சர்வதேசத்தின் பிரதான சக்திகளின் கடுப்புக்கு உள்ளாகியிருக்கின்றது இலங்கை.

இச் செயற்போக்கினால் இலங்கை தனிமைப்படுத்தப்பட்டு, நெருக்கடி ஏற்படுமானால், 1970 அவல யுகத்துக்கு நாடு மீண்டும் தள்ளப்படும் என்றும் எச்சரித்திருக்கின்றார் ரவி கருணாநாயக்க எம்.பி.

1970 முதல் 1977 வரை ஆட்சியில் இருந்த - இதே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான - அரசின் கீழ், மக்கள் பட்ட கஷ்டம் சொல்லுந்தரமன்று.

சீனா போன்ற நாடுகளை அதிகம் அரவணைத்துக் கொண்டு, ஒரு தெளிவான கொள்கைப் போக்கின்றி அப்போதைய அரசு நடந்துகொண்ட விதம் காரணமாக முழு இலங்கைத் தீவின் மக்களுமே பெரும் சிக்கல்களை எதிர்கொண்டனர்.

அதையும் விட, மிக மோசமான ஒரு நெருக்கடி நிலையை இந்நாட்டு மக்கள் எதிர்கொள்ளும் மோசமான கட்டம் கனிந்து வருவதை உணர முடிகின்றது.

நாட்டின் பொருளாதாரம் போகின்ற போக்கு விரைவில் நாட்டைப் பற்றிப்பீடிக்கப் போகின்ற நெருக்கடிக்குக் கட்டியம் கூறுகின்றது.

மனித உரிமைகளைப் பேணுதல், ஜனநாயக மாண்புகளை மதித்து நிலைநாட்டுதல், அரச பயங்கரவாதத்தை அடியோடு நிறுத்துதல் போன்றவற்றுக்குச் செயலுருக் கொடுக்க மறுத்து-

இவை தொடர்பாக மேற்குலகம் விடுக்கும் எச்சரிக்கைகளைப் புறம் தள்ளி -

மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் போன்றவை குறித்து அலட்டிக்கொள்ளாத - சர்ச்சைக்குரிய நாடுகளுடன் மட்டும் உறவை மேம்படுத்தும் போக்கில் செயற்பட்டு -

தொடர்ந்தும் விட்டேத்தியாக, பொறுப்பின்றி இலங்கை அரசுத் தலைமை நடந்துகொள்ளுமானால், ரவி கருணாநாயக்க எம்.பி. எச்சரிப்பதுபோல சர்வதேச ரீதியில் தனிமைப்படுத்தப்பட்டு, ஓரங்கட்டப்படும் ஆபத்தை இலங்கை எதிர்கொள்வது தவிர்க்க முடியாததாக இருக்கும். இதுவே யதார்த்த நிலையுமாகும்.

# 'எக்ஸ்பிறஸ்' கல்வி நிறுவனத்தில் மாணவர் கௌரவிப்பு சனியன்று

யாழ்ப்பாணம்,ஏப்.30

இருபாலை 'எக்ஸ்பிறஸ்' கல்வி நிறுவனத்தில் கற்று கடந்த ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இலங்கை வங்கியின் அனுசரணையுடனும் உதயனின் ஊடக அனுசரணையுடனும் நடைபெறவுள்ளது,

இக்கௌரவிப்பு நிகழ்வு எதிர்வரும் 3ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்வி நிறுவனத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிறுவன சிரேஷ்ட ஆசிரியர் ந.மோகநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர் வைத்திய கலாநிதி சி.சிவகோணேசன், நிறுவனத்தின் பழைய மாணவியான வைத்திய கலாநிதி தாரணி சிவகோணேசன் தம்பதியினர் கலந்து கொள்வர்.

இலங்கை வங்கியின் வட மாகாண உதவிப் பொதுமுகாமையாளர் பி.ஏ. அருமைநாயகம், கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி அதிபர் வி.கே. கணபதிப்பிள்ளை, வலி.கிழக்குப் பிரதேச சபையின் செயலாளர் த.நடராசா, நல்லூர் கோட்டக் கல்விப்பணிப்பாளர் கே.வி.குணசேகரம், இலங்கை வங்கியின் வடமாகாண செயற்பாட்டு முகாமையாளர் என்.சீவரட்ணம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

(50-202)

# நூலகக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஏப்.30

காரைநகர் பிரதேச சபை உலக புத்தக தினத்தை முன்னிட்டு நடத்தும். நூலகக் கண்காட்சி இன்று புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு சபையின் பொதுநூலகம் வடக்கில் நடைபெறவுள்ளது.

பிரதேச சபைச் செயலாளர் இரா. லோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் கலந்துகொள்வார். (202)

# தேவன்பிட்டியிலுள்ள திருச்சொரூபத்தை மீண்டும் கொண்டுவருவது குறித்து ஆராய்வு

மன்னார்,ஏப்.30

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான தேவன்பிட்டிக் கிராமத்தில் உள்ள புனித சவேரியார் தேவாயலத்துக்கு பாதுகாப்புக் காரணங்களால் கொண்டு செல்லப்பட்ட மடு மாதாவின் திருச்சொரூபத்தை மீண்டும் மடுத் திருத்தலத்துக்குக் கொண்டுவருவது குறித்துப் பரிசீலிப்பதற்கான கூட்டமொன்று நேற்றுமுன்தினம் மன்னார் மறை மாவட்ட ஆயர் இராஜப்பு ஜோசப் தலைமையில் ஆயர் இல்லத்தில் நடைபெற்றது.

மன்னார் மறைமாவட்டத்தில் பணியாற்றுகின்ற 30 குருமார்கள் இக் கூட்டத்தில் பங்குபற்றியிருந்தனர் என்றும், இதன்போது திருச் சொரூபத்தை மீண்டும் திருநிலைப்படுத்துவது குறித்து இரண்டு முடிவுகள் எடுக்கப்பட்டன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மடுத் திருப்பதிக்கு மூன்று குருக்கள் மற்றும் மூன்று தொண்டர்கள் அடங்கிய குழுவொன்றை இராணுவம் அனுமதிக்குமிடத்து இன்று புதன் கிழமை அனுப்புவது என்றும்-

மடுத் தேவாலயத்தைச் சூழவுள்ள 2 கிலோமீற்றர் பிரதேசத்தை நிரந்தர அமைதி வலயமாக இலங்கை அரசும், புலிகளும் ஏற்படுத்தித் தருவது குறித்து எழுத்து மூலமான ஒப்புதலை ஆயருக்கு வழங்கிய பின் திருச்சொரூபத்தை மடுத் திருப்பதிக்குக் கொண்டுசெல்வது என்றும் முடிவுகள் எடுக்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

மடுத் திருப்பதிக்குச் செல்லும் குருமார் மற்றும் தொண்டர்கள் அடங்கிய குழு, திருத்தலத்தைச் சுத்தப்படுத்தி அதை ஒழுங்கமைத்து வழிபாட்டுக்குரிய இடமாக திருநிலைப்படுத்துவர் என்று கூட்டத்தில் பங்குபற்றியிருந்த மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் விக்டர் சூசை தெரிவித்தார்.

# சட்டத்தரணிகள் பகிஷ்கரிப்பு அறிவித்தல் குறித்து பிரதம நீதியரசருடன் மாவட்ட நீதிபதி தொடர்புகொண்டார்

யாழ்ப்பாணம்,ஏப்.30

யாழ்.மாவட்ட நீதிமன்றங்களின் பணிகளை குடாநாட்டு சட்டத்தரணிகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை தொடக்கம் பகிஷ்கரிக்கப் போவதாக வெளிவந்துள்ள அறிவித்தல் குறித்து பிரதம நீதியரசரின் கவனத்துக்குக் கொண்டு வந்ததாக யாழ்.மாவட்ட நீதிபதி இ.த. விக்னராஜா தெரிவித்தார்.

இந்தப் பகிஷ்கரிப்புத் தொடர்பாக தமக்கு எதுவும் தெரியாது என யாழ். நீதிமன்றத்துக்கு தினமும் சமுகமளிக்கும் சட்டத்தரணிகள் தம்மிடம் தெரிவித்ததாகவும் அதன்பின்னர் இது குறித்து பிரதம நீதியரசருடன் தொடர்பு கொண்டு இது விடயத்தை அவரின் கவனத்துக்கு கொண்டு வந்ததாகவும் மாவட்ட நீதிபதி கூறினார்.

ஜனாதிபதி சட்டத்தரணியான செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் தலைமையிலான குழுவினர் மேல்நீதிமன்ற நீதி பதி பி.சுவர்ணராஜாவுடன் கடந்த மாதம் சந்தித்து தமது கோரிக்கையை முன் வைத்திருந்தனர்.

அக்கோரிக்கையை, மேல்நீதிமன்ற நீதிபதி பிரதம நீதியரசரின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தார். இது தொடர்பாக நீதிச்சேவை ஆணைக்குழு ஆராய்ந்து மேல்நீதிமன்ற நீதிபதிக்கு அறிவுறுத்தல் விடுக்கும் எனப் பிரதம நீதியரசர் தெரிவித்திருக்கிறார். அதன் பிரதியை இங்கு அனுப்புவதாகவும் அவர் கூறியுள்ளார் - என்றும் மாவட்ட நீதிபதி மேலும் தெரிவித்தார். (அ-1)

# மூலிகைகளின் மகத்துவத்தை உணர்த்தும் சித்த மருத்துவத் துறையினரின் கண்காட்சி

விஞ்ஞான வளர்ச்சியில் வானத்தைத் தொட்டுவிட்டார்கள் விஞ்ஞானிகள். இந்த விஞ்ஞான வளர்ச்சியின் ஒருபடியாக மருத்துவமும் பெரும் உயர்வை எட்டிவிட்டது. காலங்காலமாக விஞ்ஞானம் வளரும் அதே வேளை மருத்துவமும் நவீனமயப்பட்டு சிகிச்சை முறையும் எளிதாகி வந்துகொண்டிருக்கின்றது. இந்த மருத்துவமுறை மேலைத்தேய மக்களுக்கு உடனடி வளர்ச்சியாக இருக்கின்றது. ஆனால் கீழைத்தேய மக்களுக்கு உடனடி வரப்பிரசாதமாக இருப்பது சித்தமருத்துவ முறையே. அதில் சந்தேகமில்லை எனலாம்.

சித்த மருத்துவ முறையின் தந்தையாக சித்தர்களே குறிப்பாக அகத்தியரே போற்றப்படுகின்றார். குருசீட முறையில் போதிக்கப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்டு வந்த இந்த சித்த மருத்துவம் இன்று பல்கலைக்கழகத்தில் ஒரு துறையாக வளர்ந்துள்ளது. இம் மருத்துவத்தில் பாமர மக்கள் முதல் எல்லோரும் கொண்டிருக்கும் நம்பிக்கையும் பெற்ற பயன்களுமே இவ் வளர்ச்சி எனலாம். அந்தவகையில் கைதடி சித்த மருத்துவத் துறை மாணவர் மன்றத்தினரால் கைதடியில் இயங்கும் யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் சித்த மருத்துவ கண்காட்சி இதற்கு சான்று பகர்கின்றது.

இந்தக் கண்காட்சி யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை மாண வர்களுக்கும் மக்களுக்கும் பெரும் வரப்பிரசாதமானதொன்றாகும் என்றே கூறலாம். பண்டைய காலத்தில் மூலிகைகளைத் தயாரித்த முறைகள், தற்போது அதனைத் தயாரிக்கும் நவீன முறைகள் மற்றும் ஒவ்வொரு நோய்க்கும் எம்மால் எளிதாக இலகுவாகத் தயாரித்து பயன்பெறக்கூடிய மூலிகைச் செடிகள், அவற்றைப் பாவிக்கும் முறைகள் என்பன பற்றி பல விடயங்களை அங்கு நின்ற சித்த மருத்துவபீட மாணவர்கள் சோர்வடையாது தனித் தனியாக வரும் ஒவ்வொருவருக்கும் விளக்கிக் கொண்டிருக்கின்றார்கள். அத்துடன் அவர்களால் தயாரிக்கப்பட்ட மூலிகைக் குளிகை உட்பட பல மருத்துவ நிவாரணிகளும் நியாய விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

## நாம் சாதாரணமாகக் காணும் செடிகள் சித்த மருத்துவத்துக்குப் பயன்படுகின்றன

இக்கண்காட்சியில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு வினாக்களில் வரும் மூலிகைகளின் பெயர்கள், அவற்றிலிருந்து தயாரிக்கப்படும் பானங்கள் மற்றும் உணவுகளின் பெயர்கள் அங்கு காட்சிப்படுத் தப்பட்டுள்ளன. மேலும் உயர்தர மாணவர்கள் கல்விச் செயற்பாடுகளில் பயன் பெறுமுகமாக மனித உடல் ஒன்று அங்கு பதப்படுத்தி வைக்கப்பட்டு, உடலின் தொழிற்பாடு உட்பட பல விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன.

கர்ப்ப நிலை அடையும் பெண்கள் இக்காலப்பகுதியில் உண்ணும் போஷாக்கான உணவுகள் பற்றியும் பிரசவத்திற்குப் பின்னர் மேற்கொள்ளவேண்டிய பராமரிப்பு முறைகள் பற்றியும் பிறந்த குழந்தை ஒன்றுக்கு மூன்று, நான்கு வயதுவரை மேற்கொள்ளவேண்டிய பராமரிப்பு முறைகள், உணவு முறைகள் பற்றியும் அங்குள்ள மாணவர்களால் வீடியோத் திரைப்படம் ஊடாக சிறப்பாக விளக்கம் அளிக்கப்படுகின்றது. அத்துடன், தாய், தந்தையர்கள் இது சம்பந்தமான விளக்கம் மேலும் பெறுவதற்காக விளக்கக்கோவை அடங்கிய இறுவட்டும் (CD) அங்கு நியாயவிலையில் விற்பனை செய்யப்படுகின்றது.

அங்கு கண்காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள மூலிகைத் தோட்டம் எல்லோரையும் கவர்ந்தது. கிராமப்புறங்களில் காடுகளிலும் மேடுகளிலும் மற்றும் குப்பைகளிலும் வளரும் பல செடிகள் மூலிகைகளாக அங்கு வைக்கப்பட்டு அவற்றின் பாவனையும் விளக்கப்பட்டதே அதற்குக் காரணம். இவற்றைப் பார்த்த பலர் இலகுவில் கிடைக்கும் இம்மருத்துவ மூலிகைகளை தாம் இவ்வளவு நாளும் பேணிப் பயன் பெறாததை எண்ணி வேதனைப்பட்டதனையும் அங்கு நேரடியாக காணக் கூடியதாக இருந்தது.

மேலும் மூலிகைகள் மூலம் தயாரிக்கப்பட்ட இலைக்கஞ்சியும் குளிர்பானமும் அங்கு விற்பனை செய்யப்பட்ட போது பலர் முண்டியடித்து வாங்கிப் பருகியதும் குறிப்பிடத்தக்கதாகும்.

பல பயன்தரும் விடயங்களையும் நீண்டநோக்கச் சிந்தனைச் செயற்பாடுகளையும் கொண்டு நடத்தப்படும் இம் மருத்துவக் கண்காட்சிக்கு சித்த மருத்துவத்துறை மாணவர்கள் எதிர்பார்த்தது போல் பாடசாலை மாணவர்கள் வருகை தராதது பெரும் வேதனையாகவும் இருந்தது. ஒட்டுமொத்தத்தில் அனைவருக்கும் பயனுள்ளதொன்றாக இந்தச் சித்த மருத்துவத் துறையினரின் கண்காட்சி அமைந்தது.

ம.கதன்

## நாளை

| | |
|---|---|
| சித்திரை 19 | 01.05.2008 |
| | வியாழக்கிழமை |
| திதி: ஏகாதசி | பி.ப. 02.02வரை |
| நட்சத்திரம் : | சதயம் |
| | மு.ப. 08.35 வரை |
| [illegible] | 07.27 - 08.57 |
| [illegible] | 01.27 - 02.57 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் Trinity University இனது **B. Sc. in Comp. Sc.** கற்கை நெறியை

**1 North Lanka IIT** சங்கானை நிறுவனத்தில் நவீன கணினி ஆய்வுகூடத்தில்

**3** கற்பதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!!!

நீங்கள் வேலைசெய்து கொண்டு இருக்கிறீர்களா? உங்களுக்காக விடுமுறை நாட்களில் விசேடமாக வடிவமைக்கப்பட்ட பிரிவு

**2** நீங்கள் கணினித்துறை சார்ந்தவரா? ஆயினும் நீங்கள் பட்டதாரியாக இல்லாமையால் பல சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டிருக்கலாம் உங்களுக்காகவே விரைவாக நீங்களும் ஒரு பட்டதாரியாகக் கூடிய Fast Track Batch!!



நீங்கள் உங்கள் வசதிக்கேற்ப ஏதாவது ஒரு பிரிவில் இணைந்து

**2 வருடங்களில் நீங்களும் கணினிப் பட்டதாரியாக முடியும்**

சனி,ஞாயிற்றுக் கிழமைகளில் யாழ்ப்பாணத்திலும் ஏனைய நாட்களில் சங்கானையிலும் நேரில் தொடர்பு கொள்ளலாம்

நீங்கள் வேலைசெய்து கொண்டு படிக்கவிருக்கிறீர்களா? நீங்கள் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் காலப்பகுதியில் எமது நிறுவனத்தின் Software Development Center இல் வேலை செய்துகொண்டே படிக்கக்கூடியதாக வடிவமைக்கப்பட்ட பிரிவு

**5 நாட்கள் காலையில்**
Software Development ற்கான பயிற்சி
**மாலையில் வேலை**

**2 நாட்கள்**
B. Sc. in Computer Science ற்கான விரிவுரைகள்
நீங்களே உழைத்து உங்கள் உழைப்பில் படியுங்கள்

விண்ணப்ப முடிவு திகதி 05-05-2008

**Prof. A. Sanmugadas** (Administrative Advisor)

Main Street,
Chankanai.
(+94)060 221 4305
northlankaiit@yahoo.com

New College of Higher Studies
No. 95, Ariyakulam Junction,
Jaffna.
(+94)021 222 8148
(+94)060 221 4305


# மேதினக் கூட்டம்

வலி.தென்மேற்கு,ஏப்.30

புதிய ஜனநாயகக் கட்சி நடத்தும் மேதினக் கூட்டம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு புத்தூர் கலைமதி மக்கள் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பல வருடகால இடைவெளிக்கு பின்னர் இக்கட்சி யாழ். மாவட்டத்தில் இந்த மேதினக் கூட்டத்தை நடத்துகின்றது.

கட்சியின் வடபிரதேச செயலாளர் கா. கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் தேசிய கலை இலக்கியப் பேரவையைச் சேர்ந்த க.தணிகாசலம், பொ.முருகேசு, கா.பஞ்சலிங்கம் ஆகியோர் உட்பட மற்றும் பலர் உரையாற்றுவார்கள். (202-135-68)


## மணமகள்கள் தேவை

1955 ஆம் ஆண்டு, உத்தாடம், செவ்வாய்க்குற்றமுள்ள, வெளிநாட்டு P.R உள்ள மணமகனுக்கும், 1973 ஆம் ஆண்டு உத்தாடம், செவ்வாய்க்குற்றமற்ற, 1975 ஆம் ஆண்டு அனுசம், செவ்வாய்க்குற்றமுள்ள மணமகன்களுக்கும் தகுந்த மணமகள்கள் தேவை. புகைப்படம், ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**துர்க்கா திருமணசேவை**
*இல. 09, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.*
T.P. 021 4591417 (73598)




# சபிண்டீகரண அழைப்பு

## திருமதி சந்திரம்பிள்ளை பரமேஸ்வரி

தோற்றம்
03.09.1934

மறைவு
15.04.2008

அன்பும் பண்பும் அறிவும் தந்து பாசத்துடன் வளர்த்த தாயே!
பல ஆண்டுகாலம் பிள்ளைகளுடனும் பேரக் குழந்தைகளுடனும்
கொஞ்சிக் குலாவி அன்புடன் அரவணைத்த தாயே!
ஏகாதசித் திதியிலே இறைவன் பாதத்தைச் சென்றடைந்த தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு வெளிநாட்டிலிருந்தும் உள்நாட்டிலிருந்தும் தொலைபேசியில் அனுதாபம் தெரிவித்தோருக்கும், தந்தி மூலமும் நேரில் வந்தும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மரணச் சடங்கில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், பல வழிகளிலும் உதவி செய்த இளைஞர்கள், அவிபாகங்கள் வழங்கிய அனைவருக்கும் எங்கள் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நாகபூசணி அம்மன் வீதி, கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

புலேந்திரன் ஐயர்,
சந்திரம்பிள்ளை குடும்பம், பிள்ளைகள். (73651)

# மரண அறிவித்தல்



## வெற்றிவேல் பத்மராணி

மைலு வீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் வடகிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வெற்றிவேல் பத்மராணி நேற்று (29.04.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமு-இராசமணி தம்பதியரின் ஆறாவது புதல்வியும் கந்தசாமி - பூமணி தம்பதியரின் அன்பு மருமகளும் வெற்றிவேல் அவர்களின் அன்பு மனைவியும் ஹரிகரனின் அன்புத் தாயும் பூமலர், வசந்தமலர், பவா (பிரான்ஸ்), கலா (ஜேர்மன்), காலஞ்சென்ற புஸ்பராணி மற்றும் பாமா, ரதி, கோடீஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பத்மநாதன், சிறீவிஜயம், கேதீஸ்வரன், சந்திரன் (பிரான்ஸ்), சந்திரன் (ஜேர்மன்), சுரேஸ்குமார், சசிகரன், செல்வமனோகரன், செல்வராணி, செல்வமணி, ரதிமாலா, சறோஜா, லதா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2008) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கேரம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மைலு வீதி,*
*ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை.*

தகவல்:
க.வெற்றிவேல்(கணவர்). (73657)

கூட்டுறவே நாட்டுயர்வு

புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

**"கூட்டுறவு நகர்" (Co - op City)**

# திறப்பு விழா

*இடம்:* புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபம்.

*காலம்:* **இன்று(30.04.2008) புதன்கிழமை முற்பகல் 11.00 மணி.**

*தலைவர்:*
**வைத்திய கலாநிதி திரு.க.இராஜரெட்ணம் அவர்கள்**

*பிரதம விருந்தினர்:*
உயர்திரு.க.கணேஸ் அவர்கள் *(அரச அதிபர், யாழ்ப்பாணம்).*

*சிறப்பு விருந்தினர்கள்:*
திரு.பொ.சிவலிங்கம் அவர்கள்
*(கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் - யாழ்ப்பாணம்).*
திரு.செ.கனகசபாபதி அவர்கள்
*(கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் - (கணக்காய்வு).*
திரு.மு.நந்தகோபால் அவர்கள்
*(பிரதேச செயலர், தீவுப் பகுதி தெற்கு வேலணை).*
திரு.எஸ்.ஹென்றி அவர்கள்
*(உதவி பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்).*
திரு.வி.எஸ்.முதலி அவர்கள்
*(முகாமையாளர், மக்கள் வங்கி, பிரதான வீதி, யாழ்ப்பாணம்).*
திரு.பொ.இராதாகிருஷ்ணன் அவர்கள்
*(வலயக் கல்விப் பணிப்பாளர், தீவகம்).*
திரு.கை.மகேந்திரலிங்கம் அவர்கள்
*(செயலாளர், பிரதேச சபை, வேலணை.)*

நிகழ்ச்சி நிரல்
★ மங்கள விளக்கேற்றுதல்
★ கூட்டுறவு நகர் திறந்து வைத்தல்
★ வரவேற்புரை
★ ஆசி உரை
★ தலைமையுரை
★ சிறப்பு விருந்தினர் உரை
★ நன்றியுரை

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

**பணிப்பாளர்கள், பணியாளர்கள், அங்கத்தவர்கள், புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.**

(சி/552620)

# நாவுக்கரசர் குருபூசை

யாழ்ப்பாணம்,ஏப்.30

சுழிபுரத்தில் அமைந்துள்ள சிவபூமி முதியோர் இல்லத்தில்இன்றுபுதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருநாவுக்கரசு நாயனார் குருபூசை நடைபெறவுள்ளது.

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனின் சொற்பொழிவும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாணவர்களின் நடனம், வில்லிசை, இன்னிசைக்கச்சேரி ஆகிய கலை நிகழ்வுகளும் இடம் பெறும். (202)

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.30

அகில இலங்கைத் திருமுறை மன்றம் வருடந்தோறும் நடத்திவரும் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை இன்று புதன் கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலயத்தில் காலைப் பூசையுடன் அப்பர் சுவாமிகளுக்கு அபிஷேகம், ஆராதனை, வழிபாட்டுடன் நடைபெறும். (202)


# மாணவர்களே...!

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினாலும் சர்வதேசத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பட்டமேற்படிப்பை தொடர்வதற்கான அரிய சந்தர்ப்பம்



# UK Student visa



June, September கல்வி ஆண்டு,மாணவர்களுக்கான பதிவுகள் எமது நிறுவனத்தில் மேற்கொள்ளப்படுகின்றன என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்

**Part time JOB** - Students are allowed to work up to 20 Hours per week during term- time, any number of hours during vacations.

| Undergraduate Courses | Postgraduate Courses |
|---|---|
| **Bsc** (Hons) in computing<br>**Bsc** (Hons) in Businees Information Technology<br>**BA** (Hons) Accounting and Financial Management<br>**BSc** (Hons) Businees Management | Postgraduate Diploma in Distributed Computing Systems/ **Msc**, Postgraduate Diploma in Computing/ **Msc**, Postgraduate Diploma in Internet Technology and e-commerce/ **Msc** Postgraduate Diploma in Computer System & Networking, Masters in Busines Administration - **MBA**, Executive Masters in Business Administration **EMBA** |

CHARLES STURT UNIVERSITY AUSTRALIA · CITY OF LONDON COLLEGE · the UNIVERSITY of GREENWICH · LONDON metropolitan university · northumbria UNIVERSITY · University of Portsmouth · University of Sunderland · UNIVERSITY OF WOLVERHAMPTON

**Head Office:**
*IDM Education Services (Pvt) Ltd*
*City of London College- UK*
*South Asia Regional Office*
*230, 4th Floor, Galle Road,*
*Colombo- 04*

**IDM Computer Studies**
216, Navalar Road
Jaffna

**IDM Computer Studies**
Moona Malai Lane
Manipay

**IDM Computer Studies**
Kodikamam Road
Nelliady

**IDM** இலங்கை அரசினாலும், சர்வதேசத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட கணனிக்கல்லூரி
216 நாவலர் வீதி யாழ்ப்பாணம். 021-2229901


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னை அணிக்கு நான்காவது வெற்றி நழுவியது டிராவிட் அணியின் வாய்ப்பு

பெங்களூர், ஏப்.30

ஐ.பி.எல். தொடரில் வீழ்த்த முடியாத அணியாக வலம் வருகிறது சென்னை சுப்பர் கிங்ஸ். நேற்றுமுன்தினம் நடந்த பரபரப்பான லீக் போட்டியில் அணித்தலைவர் டோனியின் அதிரடி கைகொடுக்க, டிராவிட்டின் பெங்களூர் றோயல்ஸ் சலஞ் சர்ஸ் அணியை 13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சென்னை அணி வீழ்த்தியது. இதன் மூலம் தொடர்ந்து நான்காவது வெற்றியைப் பதிவு செய்துள்ளது. கடைசி கட்டத்தில் தடுமாறியதால் டிராவிட் அணி கைக்கு எட்டிய வாய்ப்பைப் பரிதாபமாக கோட்டைவிட்டது.

இந்தியன் பிறீமியர் லீக் (ஐ.பி.எல்.) தொடர் நாட்டின் பல்வேறு இடங்களில் நடக்கிறது. நேற்றுமுன்தினம் பெங்களூரில் நடந்த லீக் போட்டியில் டோனியின் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, டிராவிட் தலைமையிலான பெங்களூர் றோயல்ஸ் சலஞ்சர்ஸ் அணியை சந்தித்தது. பெங்களூர் அணியில் சுழல் மன்னன் கும்ளே, சுனில் ஜோஷி நீக்கப்பட்டனர். டேல் ஸ்ரைன், வசீம் ஜாபர் ஆகியோர் வாய்ப்பு பெற்றனர். சென்னை அணியில் முரளிதரன் நீக்கப்பட்டு, மோர்கீல் இடம் பெற்றார். நாணயச் சுழற்சியில் வென்ற டோனி முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார்.

முதல் ஓவரை ஸ்ரைன் மணிக்கு 144 கிலோ மீற்றர் வேகத்தில் வீசி மிரட்ட, ஒரு ஓட்டம்தான் கிடைத்தது. கடந்த போட்டிகளில் சிறப்பாகப் பிரகாசித்திருந்த ஹைடன் இம்முறை ஏமாற்றினார். வழக்கத்துக்கு மாறாக படுநிதானமாக விளையாடிய அவர் 19 பந்துகளில் 13 ஓட்டங்கள் எடுத்து, சஹீர்கானின் பந்துவீச்சில் 'போல்ட்' ஆனார். மறுமுனையில் பார்த்தீவ், பிரவீண் பந்தில் சிக்ஸர் அடித்து அசத்தினார். ஆனால், அடுத்த பந்தில் இவரை பிரவீண் வெளியேற்றி பதிலடி கொடுத்தார். பார்த்தீவ் 21 ஓட்டங்களை எடுத்தார். பின்னர் சுரேஷ் ரெய்னா-மைக்கல் ஹசே ஜோடி கலக்கியது. ஆரம்பத்தில் ஒன்று இரண்டு ஓட்டங்களாகச் சேர்த்த இவர்கள் மெல்ல அதிரடிக்கு மாறினர். அகில் மற்றும் பிரவீண் பந்தில் தலா ஒரு சிக்ஸர் அடித்து ரெய்னா அசத்தினார். இவர் 17 பந்துகளில் 28 ஓட்டங்கள் எடுத்த நிலையில் 'ரன் அவுட்' ஆனார்.

அடுத்து அணித்தலைவர் டோனி வந்தார். ஸ்ரைனின் வேகத்தில் தொடர்ச்சியாக இரண்டு பவுண்டரிகள் விளாசினார். மறுமுனையில்



ஹசேயும் மிரட்டினார். இவர் அகில் ஓவரில் அடுத்தடுத்து இரண்டு சிக்ஸர்கள் அடித்தார். இவர்கள் தொடர்ந்து பவுண்டரிகளும், சிக்ஸர்களும் அடித்துத் தூள் கிளப்பினர். கலிஸ் வீசிய 17ஆவது ஓவரில் ஹசே இரண்டு பவுண்டரி, டோனி ஒரு சிக்ஸர் அடிக்க 16 ஓட்டங்கள் கிடைத்தன.

ஸ்ரைன் வீசிய 19ஆவது ஓவரில் டோனி 4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் என 24 ஓட்டங்கள் எடுக்க, ஓட்டஎண்ணிக்கை ஜெட் வேகத்தில் உயர்ந்தது. டோனி அரைச்சதம் கடந்து அசத்தினார். சஹீர்கான் வீசிய கடைசி ஓவரில் டோனி இரண்டு பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் விளாசினார். இவர் 3 சிக்ஸர்கள் மற்றும் 9 பவுண்டரிகள் உட்பட 30 பந்துகளில் 65 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். ஹசே 47 ஓட்டங்களை (3 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள்) எடுத்தார். சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 178 ஓட்டங்கள் எடுத்தது.

எட்டக் கூடிய இலக்கை விரட்டிய பெங்களூர் அணிக்குத் தொடக்கத்தில் அதிர்ச்சி. கோனி பந்தில் சிப்லி(8)ஆட்டமிழந்தார். பின்னர் றோஸ் ரெய்லர், வசீம் ஜாபர் இணைந்து அருமையாக விளையாடினர். இருவரும் அதிரடியாக ஓட்டங்கள் சேர்க்க, பெங்களூர் அணிக்கு வெற்றி வாய்ப்பு இருந்தது. இந்த நேரத்தில் பழனி அமர்நாத் பந்தில் வசீம் ஜாபர்(50) ஆட்டமிழக்க சிக்கல் ஆரம்பமானது.

இதற்குப் பிறகு வந்தவர்கள் ஏனோ தானோ என விளையாடினர். இதனால் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 102 ஓட்டங்கள் எடுத்து வலுவாக இருந்த அணி, அதலபாதாளத்தில் விழுந்தது. கலிஸ்(14),ஜோகிந்தர் வேகத்தில் வீழ்ந்தார். மீண்டும் பந்துவீச வந்த பழனி 'ஆபத்தான' றோஸ் ரெய்லரை(53) வெளியேற்றி திருப்புமுனை ஏற்படுத்தினார். மிகவும் எதிர்பார்க்கப்பட்ட அணித்தலைவர் டிராவிட்(0), கோனி பந்தில் விக்கெட்டைப் பறிகொடுத்தார். பௌச்சரும்(4) ஏமாற்றினார். பின்வரிசை வீரர்கள் விரைவாக நடையைக் கட்ட, பெங்களூரு றோயல்ஸ் சலஞ்சர்ஸ் அணி 19.4 ஓவர்களில் 165 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்து தோல்வியைத் தழுவியது

சென்னை அணியின் துடுப்பாட்டத்தில் கடைசி கட்டத்தில் பதற்றப்படாமல் அணியைக் கம்பீரமாக வழிநடத்திய அணித்தலைவர் டோனி மீண்டும் ஒரு முறை வெற்றிநாயகனாக ஜொலித்தார். ஆட்ட நாயகன் விருதையும் தட்டிச் சென்றார்.

## மன்னிப்புக் கோரினார் அக்தர்

இஸ்லாமாபாத், ஏப்.30

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையால் நியமிக்கப்பட்ட தீர்ப்பாயத்திடம் சொய்ப் அக்தர் நேற்று பகிரங்க மன்னிப்பு கேட்டுக் கொண்டுள்ளார். சக வீரரை தாக்கியமைக்காக சர்ச்சைக்குரிய பாகிஸ்தான் வேகப் பந்துவீச்சாளர் சொய்ப் அக்தருக்கு 5 ஆண்டுகள் போட்டித் தடை விதிக்கப்பட்டது.

இதை எதிர்த்து அவர் மனுதாக்கல் செய்தார். அக்தரின் மனுவை பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தீர்ப்பாயம் விசாரித்து வருகிறது. இந்நிலையில் இத்தீர்ப்பாயத்தின் முன் நேற்று ஆஜரான சொய்ப் அக்தர், தனது செயல்களுக்கு பகிரங்க மன்னிப்பு கேட்டுக் கொண்டுள்ளார். அக்தரின் மன்னிப்பு உரிய விதத்தில் பரிசீலிக்கப்படும் என தீர்ப்பாயம் அறிவித்துள்ளது.




## பதினொரு ஐ.பி.எல் போட்டிகளில் விளையாட ஹர்பஜனுக்குத் தடை

புதுடில்லி, ஏப்.30



சிறிசாந்த் கன்னத்தில் அறைந்த விவகாரம் தொடர்பாக ஹர்பஜனுக்கு 11 ஐ.பி.எல். போட்டிகளில் பங்கேற்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இப்பிரச்சினை தொடர்பாக, நேற்றுமுன்தினம் டில்லியில் ஐ.பி.எல். ஒழுங்கு நடவடிக்கை குழுவின் விசாரணை, போட்டிநடுவர் பரூக் இன்ஜினியர் முன்னிலையில் நடந்தது.

விசாரணையின் போது சோனி மேக்ஸ் தொலைக்காட்சி நிறுவனம் 21 கமராக்கள் மூலம் எடுத்த போட்டியின் காட்சிகள் ஒளிபரப்பப்பட்டன. இந்த வீடியோ காட்சியில், ஹர்பஜன் தாக்கிய சம்பவம் வெட்ட வெளிச்சமானது.

இதையடுத்து, ஐ.பி.எல். நடத்தை விதிமுறை 4.2இன் கீழ் (எதிரணி வீரரை உடல்ரீதியாக தாக்குவது குற்றம்) ஹர்பஜனுக்கு 11 போட்டிகளில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டது. இதையடுத்து, எஞ்சிய ஐ.பி.எல். லீக் போட்டிகளில் இவர் பங்கேற்க முடியாது. ஒருவேளை மும்பை இந்தியன்ஸ் அணி அரையிறுதிக்கு முன்னேறினால், பங்கேற்க வாய்ப்பு உள்ளது.

ஹர்பஜனுக்குத் தடை விதித்த போட்டி நடுவர் பரூக் இன்ஜினியர், சர்ச்சைக்குரிய போட்டிக்கான சம்பளத்தில் இருந்து 100 சதவீத அபராதமும் விதித்தார். தவறை தடுக்காத காரணத்துக்காக அணியின் பயிற்சியாளர் லால்சந்த் ராஜ்புட்டுக்கு 50 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டது. களத்தில் கண்ணியமாக நடந்து கொள்ளும்படி சிறிசாந்துக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

# இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தலையிடவேண்டும் என்கிறது பா.ஜ.க.

## அதன் தலைவர் ராஜ்நாத்சிங் நேற்று சென்னையில் பேட்டி

இலங்கைப் பிரச்சினைக்கு பேச்சுமூலம் தீர்வுகாண இந்தியா தலையிட வேண்டும். இந்தப் பிரச்சினை தொடர்பாகத் தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமையை வரவேற்கிறேன்.

- இவ்வாறு பா.ஜ.க. தலைவர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

பா.ஜ.க. மாநிலத் தலைவர்கள் மேற்கொண்டுள்ள தாமரை யாத்திரை நிறைவு விழாவில் கலந்துகொள்ள தமிழகம் வந்துள்ள ராஜ்நாத் சிங் சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோதே இதனைத் தெரிவித்தார்.

அப்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட பிரச்சினை குறித்து விசாரிக்க தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியின்போது குழு அமைக்கப்பட்டது.

ராஜீவ் கொலைச் சம்பவத்தில் தி.மு.கவுக்கு தொடர்பு இருப்பதாக சந்தேகத்தின் பேரில் தி.மு.க. அங்கம் வகித்த ஐக்கிய முன்னணி அரசை சோனியா கவிழ்த்தார்.

ஆனால், தற்போது சோனியாவின் கட்டுப்பாட்டில் உள்ள ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு, இந்தக் குழுவின் விசாரணை பற்றி எதுவும் தெரிவிக்கவில்லை. இந்தக் குழுவின் விசாரணை தொடர்பாக மத்திய அரசு அறிக்கை வெளியிடவேண்டும்.

சேது சமுத்திரத் திட்டப்பாதையை மாற்றி அமைத்து ராமர் பாலத்திற்கு பாதிப்பு இல்லாமல் அத்திட்டத்தை நிறைவேற்ற முதலமைச்சர் கருணாநிதி முயற்சி மேற்கொள்ள வேண்டும் - என்றார்.

பின்னர் செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த ராஜ்நாத் சிங், ஒகேனக்கல் பிரச்சினையில் கர்நாடகத்தில் புதிய அரசு அமைந்தவுடன் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என நம்பிக்கை தெரிவித்தார்.

இட ஒதுக்கீட்டில் கிரீமிலேயர் பிரச்சினை தொடர்பான கேள்விக்கு உச்சநீதிமன்றத் தீர்ப்பை பாஜக ஆதரிப்பதாகக் கூறினார்.

## வன்முறையைத் தூண்டும் வகையில் பேசினார்; திருமாவளவனுக்கு நீதிமன்றம் பிடியாணை

சிதம்பரம், ஏப்.30

வன்முறையைத் தூண்டும் வகையில் பேசினார் என்றுகூறி தொடரப்பட்ட வழக்கில் விடுதலைச் சிறுத்தைகள் பொதுச் செயலாளர் தொல்.திருமாவளவனுக்கு சிதம்பரம் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

கடலூர் மாவட்டம் சேத்தியாத்தோப்பு அருகே உள்ள குமாரக்குடி பகுதியில் கடந்த 11.05.1997இல் தேர்தல் பிரசாரத்தின்போது வன்முறையைத் தூண்டும் வகையில் பேசினார் எனவும் அத்துமீறிப் பேசினார் எனவும் திருமாவளவன் மீது பொலிஸார் வழக்குத் தொடர்ந்தனர். இந்த வழக்கு சிதம்பரம் நீதிமன்றில் நடந்து வந்தது. இந்த வழக்கில் திருமாளவளவன், நீதிமன்றில் ஆஜராகாமல் இருந்துவந்தார். இந்தநிலையில் நேற்றுமுன்தினம் காலை மீண்டும் இந்த வழக்கு நீதிபதி பிரகாசன் முன்னிலையில் விசார ணைக்கு வந்தது. அப்போது வழக்கு விசாரணைக்காக திருமாவளவன் ஆஜராகாததால் அவருக்கு பிடியாணை பிறப்பித்து நீதிபதி பிரகாசன் உத்தரவிட்டார்.

## சேதுத்திட்ட விவகாரம் இன்று நீதிமன்றத்தில்

புதுடில்லி, ஏப்ரல் 30

சேதுசமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, ராமர் பாலத்தை இடிப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்திருந்தது. இந்தத் தடையை நீக்கக் கோரும் மனு மீதான விசாரணை, இன்று (புதன்கிழமை) நடக்கிறது.

## கண்ணீர் அஞ்சலி

**அமரர் அன்னப்பிள்ளை மயில்வாகனம்**

(இளைப்பாறிய ஆசிரியை)

அன்னாரின் இழப்பினால் துயருரும் குடும்பத்தினருக்கும் குறிப்பாக அன்பு மகனும் யா/எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேச வித்தியாலய சிரேஷ்ட ஆசிரியருமான திருஐ.தேவராஜன் அவர்களுக்கும் எம் அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆசான் அவை,
யா/எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேச வித்தியாலயம்,
யா/மிருசுவில் றோ.த.க. பாடசாலை


## பதவி வெற்றிடம்

காப்புறுதித்துறையில் முன்னனி நிறுவனமான யூனியன் அஸ்யூரன்ஸ் யாழ் கிளைக்கான வெற்றிடங்கள்.

பதவி: (I) காப்புறுதி பிரதிநிதி (Insurance Representative)
(II) காப்புறுதி ஆலோசகர் (Insurance Advisor)

தகைமை:(I) GCE. (O/L) (கணிதம் உட்பட பாடங்களில் சித்தி)
(II) ஏற்கனவே காப்புறுதித் துறையில் முன் அனுபவம் உள்ளவரும் சந்தைப்படுத்தலில் முன் அனுபவமும் உள்ளவரும் விண்ணப்பிக்கலாம்.

அத்துடன்

★ உழைப்புக்கு ஏற்ற கவர்ச்சிகரமான ஊதியம்.
★ வருடா வருடம் விருதுகள் பெறும் வாய்ப்பு.
★ வெளிநாட்டு சுற்றுலா வாய்ப்புகள்.

எதிர்வரும் 02.05.2008 வெள்ளிக்கிழமை காலை 8.30 தொடக்கம் 12.30 வரை நடைபெறவிருக்கும் நேர்முகத் தேர்வுக்கு ஸ்ரான்லி வீதியிலுள்ள யாழ். கிளைக்கு சுயவிவரக் கோவையுடன் சமூகம் தரவும்.

யூனியன் அஸ்யூரன்ஸ் காப்புறுதி அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ்.கிளை
T.P.0777062349, 0212223753


## திருத்தி வாசிக்கவும்

"யாழ். குடாநாட்டு சட்டத்தரணிகள், யாழ். குடாநாட்டு நீதிப்பணிகளை புறக்கணித்தல் பற்றிய அறிவித்தல்" என்ற தலைப்புடன் 28.04.2008 ஆம் திகதி உதயனில் 12 ஆம் பக்கத்தில் வெளியான விளம்பரத்தில் -

இரண்டாவது பந்தியில் - 27.10.2007 ஆம் திகதியன்று யாழ்ப்பாணத்தில் புதிதாக திறந்து வைக்கப்பட்ட நீதிமன்றத் தொகுதியில் என்று ஆரம்பமாகும் வசனம்-

2007.10.24 ஆம் திகதி அன்று யாழ்ப்பாணத்தில் புதிதாக திறந்து வைக்கப்பட்ட நீதிமன்றத் தொகுதியில் - என்று பிரசுரமாகியிருக்க வேண்டும். இதனைத் திருத்தி வாசிக்கவும்.

## மரண அறிவித்தல்

**அமரசிங்கம் மயிலுப்பிள்ளை**

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் உடுவில் றோட், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட அமரசிங்கம் மயிலுப்பிள்ளை நேற்று (29.04.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் தங்கம்மாவின் (அமரர்) கணவரும் சண்முகலிங்கம்(பாலா ஸ்ரோர்ஸ்), நிர்மலாதேவி (இந்தியா), தர்மலாதேவி (ஜேர்மனி), சந்திரலிங்கம்(கனடா), இந்திரலிங்கம், தேவேந்திரலிங்கம் (கனடா), சுந்தரலிங்கம், கணேசலிங்கம் (லண்டன்) ஆகியோரின் தந்தையாரும். இன்பராணி, தில்லைநாயகர், மனோகரன், இதயராணி, சிவசோதி, புஸ்பரூபி, சுமதிமலர், சோபனா ஆகியோரின் மாமியாரும் நாகம்மா, குணசேகரம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2008) புதன்கிழமை பி.ப 1 மணிக்கு நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*தகவல்:*
சண்முகலிங்கம்
(மகன்-பாலா ஸ்ரோர்ஸ்-துரை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி.சீ.ஈ. உயர்தர மீளாய்வு முடிவு இன்று வெளிவருகிறது

கொழும்பு, ஏப்ரல் 30

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பிக்கப்பட்ட பரீட்சார்த்திகளின் மீளாய்வு முடிவுகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு இன்று அனுப்பிவைக்கப்படும் எனப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்தார்.

கடந்த வருடம் இடம்பெற்ற உயர்தரப் பரீட்சைகளின் பெறுபேறுகளுக்கமைய பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்காக சுமார் 40 ஆயிரம் மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர். இவர்களில் 19 ஆயிரத்து 550 பேர் பல்கலைக்கழகங்களுக்கு இவ்வாண்டு அனுமதிக்கப்படவுள்ளனர் எனவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தப் பெறுபேறுகள் கிடைத்த இரண்டு வாரங்களுக்குள் 2007 - 2008ஆம் கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக வெட்டுப்புள்ளிகளை வெளியிடத் தயாராக இருப்பதாகவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நீதிமன்றப் பணிப் புறக்கணிப்பு எந்தவித மாற்றமும் இல்லை

யாழ்ப்பாணம், ஏப் 30

குடாநாட்டு நீதிமன்றங்களில் பணியாற்றும் சட்டத்தரணிகள் பணிப்புறக்கணிப்புத் தொடர்பில் எந்த மாற்றமும் இல்லையென மீண்டும் வலியுறுத்தப்படுகிறது.

இலங்கைச் சட்டத்தரணிகள் சங்க வடக்கு வலயத்திற்கான உபதலைவரான ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம், நேற்று விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்தப்பணிப்புறக்கணிப்பால் வழக்குகளின் கட்சிக்காரர்கள் பாதிப்புகளுக்கு உள்ளாகாமல் இருக்கும் வகையில், அவர்கள் தங்களின் வழக்குத் தவணைகளுக்கு நீதிமன்றங்களுக்குத் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் - என்றும் அந்த அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது. (அ)

# மட்டக்குளியில் இருவர் மாயம்!

கொழும்பு, ஏப்.30

மட்டக்குளி, அளுத்மாவத்தை வீதியில் வசிக்கும் கருணேந்திரன் கருணாகரன் என்ற 29 வயதுடைய தமிழ் இளைஞர் நேற்றுமுன்தினம் இரவு 10.00 மணிக்கு கடத்தப்பட்டுள்ளார்.

இதேவேளை, மட்டக்குளி, வின்ஸன் வீதியில் வசிக்கும் செல்வச்சந்திரன் நிஸான் என்ற 22 வயதுடைய தமிழ் இளைஞரும் இரவு 9.30 மணிக்கு கடத்தப்பட்டுள்ளார். இவர்கள் இருவரையும் வெள்ளை வானில் வந்த ஆயுதம் தரித்த நபர்களே கடத்திச் சென்றுள்ளார்கள். வெள்ளை வானில் வந்தோர் தாங்கள் பொலிஸ் தலைமையகத்தில் இருந்து வந்துள்ளனர் எனவும் இவர்களை விசாரணைக்காக அழைத்துச் செல்கிறோம் எனவும் கூறியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக கணாகரனின் தாயார் மக்கள் கண்காணிப்புக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளார். அத்துடன், இச்சம்பவங்கள் தொடர்பாக மோதரப் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. (சி)

## பேச்சுவார்த்தை மூல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுவார்த்தைகள் மூலம் காண்பதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் அரசியல் நடவடிக்கைகளை ஈரான் வரவேற்றுள்ளது.

பயங்கரவாதத்தை கண்டிப்தாகவும், உலகுக்குத் தொந்தரவாக உள்ள அதனை ஒளித்துக் கட்டுவதற்கு சர்வதேச ஒத்துழைப்புத் தேவை என்று இரண்டு தரப்புகளும் வலியுறுத்தி உள்ளன - என்றும் வெளிவிகார அமைச்சு வெளியீட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## ஈழவர் ஜனநாயக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(வயது - 33), தாயாரான ஞானம்மா, சகோதரரான தியாகு (வயது - 27) ஆகியோர்களே காயமடைந்த நிலையில் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

மே மாதம் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் ஈழவர் ஜனநாயக முன்னணிக் கட்சி தனது தேர்தல் பிரசாரத்தில் முனைப்பாக ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## மேலாதிக்க சிந்தனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வல்லாதிக்க நாடுகள் சமாதானத்தை - அபிவிருத்தியை - அடைய முற்படும் நாடுகளில் பிரச்சினையைத் தோற்றுவிக்கின்றன.

இனவாதம், பயங்கரவாதம், யுத்தம் போன்றவற்றை அந்த நாடுகளில் தோற்றுவித்து அந்நாடுகளை அடக்கி ஒடுக்க வல்லாதிக்க நாடுகள் முற்படுகின்றன.

இந்த வல்லாதிக்க நாடுகள் இவ்வாறான பிரச்சினைகளைத் தோற்றுவித்து அந்த நாடுகளில் உள்ள வளங்களைச் சுரண்டி தமது வயிற்றை நிரப்புகின்றன. ஈரானும், இலங்கையும் இவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றன.

### ஈரானும் இலங்கையும் எதிர்ப்பு

இவ்வாறான செயற்பாடுகளில் ஒன்றாகத்தான் பலஸ்தீன நில ஆக்கிரமிப்பும் அமைந்துள்ளது. 60 வருடங்களாக பலஸ்தீனத்தை வேறொரு நாடு ஆக்கிரமித்துள்ளது. பலஸ்தீன மக்கள் இதனால் அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்ட நிலையில் பல இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

உலக நாடுகளில் உள்ள எல்லோரும் சுதந்திரமான வாழ்வையே விரும்புகின்றனர். ஆனால், வல்லாதிக்க சக்திகள் அதற்கு இடமளிப்பதில்லை.

இலங்கையில் 24 மணி நேரத்துக்குள் மக்கள் அவர்களது சொந்த இடங்களில் இருந்து சிலரால் விரட்டப்பட்டனர் என்று மஹிந்த ராஜபக்ஷ கூறினார். நீதியை விரும்பும் மக்கள் இந்தச் செயற்பாட்டை ஒருபோதும் ஏற்கமாட்டார்கள்.

### இருநாட்டு மக்களும் சுதந்திரமான வாழ்க்கையை விரும்புகின்றனர்

ஈரான் மக்களும் இலங்கை மக்களும் சுதந்திரமான நிம்மதியான வாழ்வையே விரும்புகின்றனர். இதற்காக நான் ஈரான் மக்களின் நன்றியை இலங்கை மக்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மக்களின் பாதுகாப்பையும் நட்பு நாடுகளின் அபிவிருத்தியையும் உறுதிப்படுத்த நாம் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

முன்னேற விரும்பும் நாடுகளுக்கு நாம் உதவவேண்டும். அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு போன்ற விடயங்களில் அந்த நாடுகளுக்கு நாம் தாராளமாக உதவவேண்டும்.

எமக்கு எதிராகச் செயற்படும் வல்லாதிக்க நாடுகளுக்கு நாம் ஒருபோதும் அஞ்சமாட்டோம். அந்நாடுகளின் மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் தொடராது. அவை விரைவில் முற்றுப்பெறும்.

இவ்வாறான வல்லாதிக்க நாடுகள் ஓடி ஒளியும் காலம் மிக விரைவில் வரும். - என்றார். (சி)

## விபத்தில் சிக்கி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் தெஹியத்த கண்டியவில் வைத்து பின்னால் வந்த வாகனம் அமைச்சர் மேர்வின் சில்வா பயணம் செய்து கொண்டிருந்த வாகனத்துடன் மோதியுள்ளதாலேயே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது. சம்பவத்தை அடுத்து அமைச்சர் மேர்வின் சில்வா அம்பாறை மாவட்ட அரலகாவில் உள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பின்னர் அவர் மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு தேசிய வைத்திய சாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். அத்துடன் அமைச்சரின் கால் பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டிருப்பதாக கொழும்பு வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-சி)

## இந்தியா ஆயுதங்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியா இணங்கியுள்ளது - என்றார்.

### தகவல் குறித்து இலங்கை அதிகாரிகள் ஆச்சரியம்

இதேவேளை, ஆயுதக் கொள்வனவுக்காக இலங்கைக்கு இந்தியா 10 கோடி அமெரிக்க டொலர்களை வழங்குகின்றது என்ற தகவல் குறித்து ஆச்சரியம் வெளியிட்டுள்ள இலங்கை அதிகாரிகள் இதன் நம்பகத்தன்மை குறித்து கேள்வி எழுப்பியுள்ளனர்.

இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கோஹன்ன தமக்கு இது குறித்து எதுவும் தெரியாதென்பதால் தன்னால் கருத்துத் தெரிவிக்க முடியாது என்றும்-

இந்தியா இலங்கைக்கு ஆயுதங்களை வழங்குகின்றது எனத் தாம் கருதவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். இந்தியா சில பாதுகாப்புப் பொறிமுறைகளையும் பயிற்சிகளையும் மாத்திரமே வழங்குகின்றது என்றும் குறிப்பிட்டார்.

அதேசமயம், இன்னுமொரு நாட்டிலிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கு இலங்கைக்கு இந்தியா நிதியுதவி வழங்காது. அத்துடன், இதனைப் பகிரங்கமாகச் செய்யாது என படைத்துறை ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தியா ஆயுத உதவி எதையாவது செய்வதற்குத் திட்டமிட்டிருக்கலாம். இதனை எதிர்ப்பவர்கள் இந்தத் தகவலைப் பகிரங்கப்படுத்தியிருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானிடமிருந்து இலங்கை கொள்வனவு செய்யவுள்ள ஆயுதங்களின் விவரங்களைக் கடந்த காலங்களில் இந்திய புலனாய்வுத்துறையினர் பகிரங்கப்படுத்தியிருந்தனர். ஆயுத விற்பனையைத் தடுக்கவே இதனைச் செய்திருந்தனர் என்று ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (அ-சி)

## தமிழக மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்படகில் இருந்த இந்திய மீனவர்கள் ஆறு பேரும் உணவுதயாரிப்பதில் இருந்ததாகவும் அவர்களைக் கைதுசெய்த நெடுந்தீவுப் பொலிஸார் அவர்களை ஊர்காவற்துறை நீதிவான் திருமதி ஜோய் மகாதேவா முன் ஆஜர் செய்தனர்.

அவர்களை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-1

விக்னா கல்வி நிறுவனம்
தலைமையகம் 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
A/L 2010 வர்த்தகப்பிரிவு
மீண்டும் ஒரு புதிய பிரிவு
ஆரம்பம்: 05.05.2008 (8 மணி)
Eco. திரு B. கஜீதரன், Acc. திரு P.பகீதரன்
B.St. திரு யசோ
✕ பஸ்ஸிலிருந்து வருபவர்கள் நடந்து ஸ்ரான்லி ரோட்டால் வரவும். சைக்கிளில் வருபவர்கள் சிறாம்பியடி லேனால் வரவும்.
அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

CHEMISTRY SEMINAR
By: அன்பு
"தாக்க இயக்கவியல்"
01/05/2008 Thurs 9am
"ORGANIC" பிரிவு II
Sat,Sun = 11-12.30am ஆரம்பம் 03/05/2008
"Basic"
Sat,Sun = 12.30-2.00 ஆரம்பம் 03/05/2008
NEW SCIENCE CENTRE
யாழ் நகர்

தேவை
பிரபல கணனி நிறுவனத்திற்கு Graphic Designing, Hardware தெரிந்தவர்கள் தேவை. 06.05.2008 இற்கு முன் Biodata இணை அனுப்பி வைக்கவும்.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
விளம்பர இலக்கம் 5087
சே/பா உதயன்.

BARATHY
சித்தன்கேணி
O/L DAY CLASS
பிரிவு 2- ஆரம்பம்: 02.05.2008 வெள்ளி 8.00a.m. இதுவரையும் அனுமதி பெறாத மாணவர்கள் இப்பிரிவுக்கு அனுமதிகளை பெற்றுக் கொள்ளவும்.
Note- பிரிவு I இற்கு மாணவர் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளதால் அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

A/L 2009
பணம், வங்கி,...
ஆரம்பம்
NEW SCIENCE HALL
கன்னாதிட்டி, யாழ்.
இன்று புதன் 2.30 p.m.
IBS கண்டுக்குளி
03.05 சனி
11.30 am
பொருளியல்
.K. பிரதீபன்(B.B.A)

விக்னா
கல்வி நிறுவனம்
தலைமையகம். 52,ஸ்ரான்லி வீதி, யாழ்.
A/L 2010
கலைப்பிரிவு
மீண்டும் புதிய பிரிவு ஆரம்பம் 3.5.2008 (8 மணி)
Eco.திரு.கஜீதரன் Tam.திரு.குழந்தை
Log.திரு.கமல் Hic.திரு.பத்மராஜா
Geo.திரு.சுரேன் Hin.திரு.N.T.தரன்
Hist.திரு.பத்மன் Pl.sc.திரு.றொபின்சன்
Chri.திரு.ஜெயமோகன் Drama.திரு.மயூரன்
✱ பஸ்ஸிலிருந்து வருபவர்கள் நடந்து ஸ்ரான்லி றோட்டாலும் சைக்கிளில் வருபவர்கள் சிறாம்பியடி லேனாலும் வரவும்.
அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்

GLOBAL
Multi Trade Centre
College Road, Jaffna Hindu College Ground Junction, Jaffna
⇨ Sports ⇨ Electronics ⇨ Fancy ⇨ Stationery ⇨ Shoes
Opening : 30.04.2008
T.P: 0777179461 Proprietor: R.W.Jeffrey & K.Ramanan

UNIT
Jaffna Nelliad
Mother Boards
Intel Original 945GCNL 8950/-
Asus P5GC-MX1333Mhz 7500/-
Foxconn intel 945 6900/-
Processors
Intel Dual Core 1.6Ghz Box 4900/-
Intel Dual Core 1.8Ghz Box 8300/-
Rams
Kingston DDR1 256-2500/- 512- 3750/-
Kingston DDR2 1Gb-2500/- 512- 1750/-
Hard Disks & Optical Drives
40Gb IDE 4800/-
80Gb Sata 5600/-
80Gb IDE 5800/-
160Gb Sata 6600/-
250Gb Sata 8600/-
Combo 3700/-
DVD-RW 4500/-
External Enclosure USB 4750/-
Hard disk Cooling Fan 1000/-, 5000/-
Monitors
15" Samsung / Viewsonic CRT 11900/-
17" Samsung / Intex Flat CRT 14500/-
17" Viewsonic LCD Wide 24900/-
19" Samsung LCD Wide 31000/-
External & Internal TvTuner 3900/-
128Mb AGPVGA 4750/-
Power & Casings
ATX LGA Casings with SMPS 3750/-
SMPS - ATX LGA 500W 2500/-
Toners:
HP 12A, 13A, 15A, 35A, 49A, 53A&92A
Canon EP22, 25 & 26, 303, 308
Others
Keyboard Normal 500 MultiMedia 900
Mouse Optical 500/-, 600/-, 900/-, 1500/-
Speaker 650/-, 1250/- & 2500/-
Woofers Creative / MicroLab 4250/-
Brand New Laptops From 59000/-
New Intel Pentium From 39000/-
Special Reduction for Dealers, Assemblers, Schools, Go's & NGO's
We Are Not Big But The Best
Available Stock Only
347, K.K.S Road, Jaffna, 4590720,2228844
MMV Road, Bus Stand, Nelliady, Karaveddy

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.04.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.